SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16 - 31 ஜூலை 2026 ₹25
Volume : 47 Issue : 03
www.samarasam.net

## உயர்நீதிமன்றத் தீர்ப்பு
இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கான அநீதி

## ஆணவப் படுகொலைகளுக்கு என்னதான் தீர்வு?

# வரலாறு படைத்த இறுதி வழியனுப்புதல்



# ஹபீபி
## தமிழ் சினிமாவின் புதிய அத்தியாயம்



இன்று உலகெங்கும்
மிக அதிகமாக
வாசிக்கப்படுகின்ற,
பேசப்படுகின்ற
குர்ஆன் விரிவுரைதான்

**தஃப்ஹீமுல் குர்ஆன்**
**(திருக்குர்ஆன் விளக்கவுரை)**




₹ ~~6905~~*
**5757**

அத்தியாயங்கள்: 1 - 48
அத்தியாயங்கள்: 66-73 மட்டும்

FREE SHIPPING within TN

"எந்த மத்ஹபு குறித்தும்
ஆதரவோ எதிர்ப்போ
இல்லாமல், நபிவழியை
அடிப்படையாகக் கொண்டு
சட்ட விளக்கங்களைத்
தருதல் எனும் மகத்தான
சாதனையை
**ஃபிக்ஹுஸ் ஸுன்னா**
**(இஸ்லாமியச் சட்டக் கருவூலம்)**
சாதித்துக் காட்டியிருக்கிறது"
- டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி




₹ ~~3790~~
**3232**

PayTM Gpay PhonePe PayPal UPI UNIFIED PAYMENTS INTERFACE

8668057596 | www.iftchennai.in | UPI ID: IFTCHENNAI@SBI




## உள்ளே...


8 • நாகூர் ரிஸ்வான்
**ஹபீபி**
தமிழ் சினிமாவின் புதிய அத்தியாயம்

• கடிதங்கள் • திருக்குர்ஆன் விரிவுரை • நபிமொழி விளக்கம் • புதிர் போட்டி • நாவல்

ஆணவப் படுகொலைகளுக்கு என்னதான் தீர்வு? • தலையங்கம் 7

வரலாறு படைத்த இறுதி வழியனுப்புதல் • ரியாஸ் மொய்தீன் 14

நல்லறங்கள் என்றால் என்ன? • சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி 17

உலக வாழ்க்கையின் சாராம்சம் இதுதான்; இவ்வளவுதான்! • அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது 22

மௌலானா சையத் சல்மான் நத்வி இறைவனிடம் மீண்டார்! 24

தவெக வெற்றிக்குப் பின்னால்..! – அரசியல் நோக்கர்களின் கருத்துகள் • கப்ளிசேட் 29

உயர்நீதிமன்றத் தீர்ப்பு: இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கான அநீதி • சேயன் இப்ராகிம் 34

சமூக நீதியைப் பின்னோக்கி இழுக்கும் தீர்ப்பு: தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் • மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ 37

மானம் காத்த மரக்குழாய் • முகம்மது கபீர் 38

கவிதை : கைத்தடி • கவிஞர் காசீம் 41

விரல் ரேகையும் திருக்குர்ஆனும் • A.S.M. ரசான் 42

அஹமதின் அபார சாதனை • ரியாஸ் 50



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | : ரூ.550 |
| அரையாண்டு | : ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
• 044-2662 0091
• samarasam.article@gmail.com
• www.samarasam.net




## ● அரசு அவர்களைக் கௌரவிக்க வேண்டும்

தில்லியில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 உயிர்களைக் காப்பாற்றிய ரியாசுத்தீன் மன்சூரி, ஐந்து இளைஞர்களைக் குறித்த கடைசிப் பக்கச் செய்தி பாராட்டுக்குரியது. அரசு அவர்களைக் கௌரவிக்க வேண்டும். பாலியல் வல்லுறவுகள் குறித்த சேயன் இப்ராகிமின் கட்டுரை அருமை. கஞ்சா, குடிப்பழக்கம் மனிதனை மிருகமாக்கி விடுகிறது. திருக்குர்ஆனை வாசிப்பதைப் போல வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற கருத்து சிறப்பானது.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## ● பிஜேபியை ஜேசிபி வீழ்த்தட்டும்

ஒரு நீதிபதி சொன்ன இழிவான வார்த்தையால் உருவானது கரப்பான் பூச்சி ஜனதா கட்சி. ஆனால் அவர்கள் எடுத்துக் கொண்ட கொள்கை பாராட்டும்படியாக உள்ளது. மற்ற கட்சிகளைப் போல இல்லாமல் எடுத்துக் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும். பாஜகவுக்கு மாற்றாக இருக்க வேண்டும். பாஜகவை வீழ்த்த வேண்டும்.

– M. ராதாகிருஷ்ணன், வாணியம்பாடி

## ● டிஜிட்டல் நன்மைகளும் தீமைகளும்

தகர்க்கப்பட்ட மாணவர்களின் மாபெரும் கனவைத் துல்லியமாகச் சொல்லியது தலையங்கம். பரபரப்பாகப் பேசப்படும் புகார்கள் அடுத்த பரபரப்புக்கு இரையாகி விடுகின்றன. இன்றைய டிஜிட்டல் உலகம் நுழையாத துறைகளே இல்லை. எந்த அளவிற்குத் துல்லியமான பயன்பாடு இருக்கின்றதோ அதே போல இல்லாத பிரச்னைகளை உருவாக்க முடியும்.

கல்வியின் பொற்காலம் பல ஆய்வுகளைத் தந்ததோடு இஸ்லாமிய வரலாற்றின் உண்மைகளை வெளிப்படுத்திக் காட்டியது. பாலியல் வல்லுறவுகள் தீர்வு என்ன? சமூகம் முதலில் திருந்த வேண்டும். ஆனால் அதற்கு முன்பு தனிநபர் ஒழுக்கம் மிக மிக அவசியம். அரசின் கடுமையான நடவடிக்கை இருந்தால் ஒழிய இதை ஒழிப்பதற்கு வழி இல்லை. கரப்பான் பூச்சி ஜனதா கட்சி போல் இளைஞர்கள் முன் வந்தால் நாட்டில் நடைபெறும் அவலங்களை மாற்ற முடியும்.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## ● இந்தியாவின் பொற்காலம்

நபி(ஸல்) அவர்களின் நபிமொழிகளை விளங்காமல் குர்ஆனுடைய அறிவை எவராலும் பெற்றுக் கொள்ள முடியாது என்ற யதார்த்தத்தை நபிமொழியின் முக்கியத்துவம் கட்டுரை விளக்கியது. முகலாயர்கள் காலத்தில்தான் இந்தியா பொருளாதார வல்லரசாக இருந்தது என்பது முற்றிலும் உண்மையே. உலகப் பொருளாதார வளர்ச்சியில் உற்பத்தியிலும் வியாபாரத்திலும் 25 விழுக்காடு இந்தியாவின் கையில் இருந்தது. இவ்வளர்ச்சி கி.பி.1700 முதல் 1850 கால கட்டத்தில்தான் என முகலாய காலக்கட்டத்தை ஒப்புக் கொள்கிறார் ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தி. இத்தகவல் ஔரங்கஜேப் குறித்த ஒரு நூலில் நான் படித்துள்ளேன்.

உயிர் காக்க உதவிய ரியல் ஹீரோக்களான ரியாசுதீன் மன்சூரிக்கும் அவர் மகனுக்கும் பொருளாதார வளத்தை அருள இறையைப் பிரார்த்திப்பதுடன் எரியும் கட்டிடத்தில் சிக்கிய மக்களை உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றிய இதர ஐந்து முஸ்லிம் இளைஞர்களுக்கும் டெல்லி அரசாங்கம் உரிய மரியாதை செய்ய வேண்டும்.

– ப. சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## ● சுய ஒழுக்கமே தீர்வு

இழிவுக்கு மேல் இழிவு என்ற பாஜக அரசின் நிலையைப் படம்

பிடித்துக் காட்டுகிறது தலையங்கம். சம்பந்தப் பட்ட அமைச்சரோ இவ்வளவு கேவலத் துக்கு உள்ளாகியும் அட்டைப் பூச்சியைப் போல பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது மன்னிக்க முடியாதது. அனைத்து எதிர்க் கட்சித் தலைவர்களும் கல்வி அமைச்சர் பதவி விலகும் வரை போராட வேண்டும். கல்வித்துறை சீரழிவுகளுக்கு நாட்டு மக்களி டம் மன்னிப்புக் கேட்பதுடன், உடனடியாக கல்வித்துறையைச் சீரழித்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கி சிறையில் தள்ள வேண்டும்.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி குறித்த சிக்கலான அந்தக் கட்சி அமைப்பை மறு முறை படித்த பிறகுதான் விளங்க முடிந்தது. ரியாஸ் அவர்களுக்கு நன்றி. ஏதோ சில மாற்றங்கள் இந்தியாவில் நடக்கப் போகிறது என்பதை கட்டுரை சூசகமாகத் தெரிவித்தது. பாலியல் வல்லுறவு குறித்து கட்டுரையாளர் சில தீர்வுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒவ்வொருவரும் தனக்குத்தானே சுய ஒழுக் கத்தைக் கடைப்பிடிக்காதவரை பாலியல் அத்துமீறல்கள் நடந்து கொண்டுதான் இருக்கும்.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன்சத்திரம்

## • அழகிய நபிமொழி

வீண் செலவுகள் வறுமைக்கு இட்டுச் செல்லும் என்பதை நபிமொழி உணர்த்தியது. ஆனைமங்கலம் செப்பேடு உண்மைத் தகவல்கள் வியப்பளித்தது. கரப்பான் பூச்சி ஜனதா கட்சி குறித்த தகவல்கள் சிறப்பு. அவர் களின் செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்பதை வரும் காலம் உணர்த்தும்.

– T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

## • சிறந்த வாழ்வியல் பாடம்

திருக்குர்ஆனை தினமும் படித்து அதன்படி நடக்க வேண்டும் என்பதை வாழ் வியல் பாடம் அழுத்தமாக எடுத்துரைத் தது. சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் இளைய தலைமுறையினரின் கைகளில் என்பதை அன்வர் ஸலபி சிறப்பாக எடுத் துரைத்துள்ளார். இந்தியாவின் பன்முகத் தன்மையையும், ஊடகச் சிறப்பையும் IFT பெருநாள் சந்திப்பு நிகழ்வில் எடுத்துரைத்த விதம் நன்று.

– M. லைலாம்மா, S. அஜித்தா,
S. மகுதனன், தேனி

## • எல்லாருக்குமான சமரசம்

47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் சமரசத்திற்கு வாழ்த்துகள். சமரசம் முஸ்லிம்களுக்கான செய்தியை மட்டும் வெளியிடாமல் அனைத்து மக்களுக்குமான செய்திகளை, நாட்டு நிகழ்வுகளை மிகச் சிறப்பாக வழங்கி வருகிறது. கடந்த இதழில் வெளியான 12 தலைப்புகளும் மிகச் சிறப்பானவை. ஜரினா ஜமாலின் அக்கரைப் பச்சை அருமையான தொடர். வாழ்த்துகள்.

– S. ராமுபிள்ளை, ஒகளூர்

## • வரலாற்று ஆவணம்

தேர்வு மோசடி, குழப்பம் குறித்த தலையங்கம் சிந்தனைக்குரியது. நீட் தேர்வு மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குள்ளாக்கும் கண்கட்டி வித்தை போன்றது. இதனாலேயே மாணவர்கள் பலர் தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

அரசியல் ஆதிக்கத்திற்கு இளைஞர் களால்தான் முடிவு கட்ட முடியும். கரப்பான் பூச்சி கட்சி அந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. பாலியல் வல்லுறவு களுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும். சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். மினுமினுக்கும் திரைக்குப் பின்னால்.. புதிய கோணத்தில் எழுதப்பட்ட கட்டுரை. ஆனைமங்கலம் செப்பேடு அரிய வரலாற்று ஆவணம். மனிதன் நன்னெறியில் நடை போட நபிமொழியின் வழிகாட்டுதல் அவசியம்.

– ப.குருசாமி, தேனி

## திசை



# விலை போய் விடாதீர்கள்

பொறுமையையும், அமைதியையும் கைக்கொள்ளுங்கள். இறை வாக்கின் மீதும், அவன் உதவி வருமென்பதிலும் முழுக்க முழுக்க நம்பிக்கை வையுங்கள்; உங்களுடைய செயல்முறையைக் கண்ணியத்துக்கும், மதிப்புக்கும் உரியதாக ஆக்குங்கள். உங்களுடைய ஆளுமைச் சிறப்பையும், குணங்களையும்(Personality) மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். அது எந்த அளவுக்கு உயர வேண்டும் என்றால் தீமையும், அசத்தியமும் உங்களை விலைக்கு வாங்கும் வலிமையை இழந்துவிட வேண்டும்.

சத்தியத்தை எதிர்ப்பவர்களும், சத்தியத்தின் விரோதிகளும் தம் கூக்குரலினால் உங்களைச் சத்தியப் பாதையிலிருந்து அகற்றி விடலாம் என்று நினைக்கும் அளவிற்கு நீங்கள் பலவீனமாக இருக்கக் கூடாது. அவர்கள் உங்களுக்கு எதிராகச் செய்யும் பொய்ப் பரப்புரைகளால் நீங்கள் திகைப்படையக்கூடாது.

அவர்கள் செய்யும் கேலி, பரிகாசம் ஆகியவற்றினால் உங்கள் மனம் சத்தியத்துக்காக உழைப்பதிலிருந்து தளர்ந்து விடக்கூடாது. அவர்களின் அச்சுறுத்தல்களையும், பயமுறுத்தல்களையும், தம் வலிமையை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் செய்யும் ஆரவாரங்களையும், புரியும் கொடுமைகளையும் கண்டு நீங்கள் பயந்துவிடக் கூடாது. அவர்கள் கூறும் ஆசை வார்த்தைகளில் மயங்கி நீங்கள் சத்தியப் பாதையிலிருந்து நழுவிவிடக் கூடாது.

சமூகம், நாடு, கட்சி ஆகியவற்றின் நலன்களைச் சுட்டிக்காட்டி அவர்கள் விடுக்கும் கவர்ச்சிகரமான அழைப்பில் மயங்கி, சத்தியத்தை விட்டுக் கொடுக்கும் எந்தவிதமான உடன்படிக்கை செய்யும் எண்ணமும் உங்களுக்கு ஏற்படக் கூடாது.

– மௌலானா **சையத் அபுல் அஃலா மௌதூதி(ரஹ்)**

சரம் : 47
மலர் : 03

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ஸபர் 1-16 • 2026 ஜூலை 16-31

# ஆணவப் படுகொலைகளுக்கு என்னதான் தீர்வு?

திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லியைச் சேர்ந்த ராமலட்சுமி தலித் சமூகத்தைச் சேர்ந்த இளைஞரைக் காதலித்ததால் அவரது தம்பி முத்துக்கிருஷ்ணனால் அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். தூத்துக்குடி மாவட்டம் மயிலோடையைச் சேர்ந்த அபி செல்வி தலித் இளைஞரைக் காதலித்ததால் அவரது அண்ணன் சிவஞானம், அம்மா எஸ்தர் பாலின் ஆகியோரால் படுகொலை செய்யப்பட்டார். விருதுநகர் மாவட்டத்திலுள்ள பட்டியலினத்தைச் சேர்ந்த அழகேந்திரன் பட்டியலினத்தில் வேறு சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்ததால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மயிலாடுதுறை மாவட்டம் புதுப்பாளையத்தைச் சேர்ந்த காதலர்களான பார்த்திபனும், திவ்யதர்ஷினியும் இரு வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஜூன் மாதம் தமிழ்நாட்டில் நடந்த ஆணவப்படுகொலைகள் இவை.

‘கடந்த 75 நாள்களில் தமிழ்நாட்டில் வெளிச்சத்திற்கு வந்த ஆணவப் படுகொலைகள் 8. இன்னும் வெளிவராத கொலைகள் எத்தனையோ?’ என்கிறார் எவிடென்ஸ் கதிர். கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2026 ஜூன் வரை சுமார் 30 ஆணவக் கொலை, தாக்குதல் சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்திருக்கின்றன. ‘காதல் விவகாரத்தால் ஆண்டுதோறும் 120 முதல் 150 கொலைகள் நடக்கின்றன. ஆனால் சாதி ஆணவக் கொலைகள் தொடர்பாக அரசிடம் மிகச் சொற்பமான தகவல்களே உள்ளன’ என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

கண்ணகி முருகேசன், கௌசல்யா சங்கர், சுவாதி கோகுல்ராஜ், இளவரசன் திவ்யா, சுபாஷினி கவின் போன்ற தமிழ்நாட்டை உலுக்கிய சாதி வெறிப் படுகொலைகள் இன்னும் தொடர்வது வேதனைக்குரியது. இதுபோன்ற படுகொலைகள் தொடர்பாக 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் உச்ச நீதிமன்ற அமர்வு தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அதில் ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்காகவும் அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் அந்தக் குற்றத்தில் ஈடுபடுகிறவர்களைத் தண்டிப்பதற்காகவும் சிறப்புச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் இயற்ற வேண்டும்’ எனப் பரிந்துரை செய்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக 2019ஆம் ஆண்டு இராஜஸ்தான் அரசு ஆணவக் கொலைகளுக்கு எதிராக ஒரு சட்டத்தை இயற்றியது. கர்நாடகாவில் கடந்த ஏப்ரல் மாதம் ஆணவக் கொலைகளுக்கு எதிராக ‘கௌரவம், பாரம்பரியம் சார்ந்த வன்முறை தடுப்புச் சட்டம் 2026’ நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 2025 நவம்பர் மாதம் திமுக அரசு ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் ஒன்றை அமைத்தது. அந்த அறிக்கை இன்னும் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு கே.என். பாஷா ஆணையத்தின் பரிந்துரைகளைப் பெற்று ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்கான சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும்.

தங்களுடைய சாதிப் பெருமைக்காக பெற்ற பிள்ளைகளை வெட்டிச் சாய்க்கின்ற கொடூரம் மனிதகுலத்தின் அவமானம். ஆணவப் படுகொலை செய்யும் வெறியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்தினால் இது போன்ற கொடூரங்களை ஓரளவு மட்டுப்படுத்த முடியும். ஆனால் இதுவே நிரந்தரத்தீர்வு அல்ல. சிந்தனை மாற்றம் வரவேண்டும்.

சாதி, இன, மொழி, மதப் பாகுபாடுகள் எல்லைமீறிய வெறியாக மாறிவிடக் கூடாது. மனிதர்கள் அனைவரும் சமம். எல்லாரும் ஒரு ஆதித்தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் வர வேண்டும். எவரும் இங்கு உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லை. மனித குலம் ஒரே குடும்பம் என்ற சிந்தனை மாற்றம் வராத வரை இங்கு எந்த மாற்றமும் சாத்தியமில்லை.

# ஹபீபி

## தமிழ் சினிமாவின் புதிய அத்தியாயம்

**- நாகூர் ரிஸ்வான்**



இதுவரை தமிழில் வெளிவந்த படங்களில் யாருமே பதிவு செய்யாத மனிதர்களைப் பற்றிய திரைப்படம் ஹபீபி. வழக்கமான மசாலாப் படங்கள் கடைப்பிடிக்கிற விதிகளையெல்லாம் தகர்த்து தென் தமிழகத்து முஸ்லிம்களுடைய, குறிப்பாக கடையநல்லூர் மக்களுடைய வாழ்க்கையை ரத்தமும் சதையுமாகப் பதிவு செய்திருக்கிறது இத்திரைப்படம்.

இப்படியான ஒரு யதார்த்த சினிமா பொதுமக்கள் அனைவருடைய மனங்களையும் வென்றிருப்பதும், ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருப்பதும் நல்ல சினிமாவின் மீது அக்கறையுள்ள அனைவருக்கும் நம்பிக்கையூட்டும் நற்செய்திதான். இந்த மகத்தான சாதனையை நிகழ்த்தியிருக்கும் படத்தின் இயக்குநர் மீரா கதிரவன், கதையாசிரியர் வி.எஸ்.முஹம்மத் அமீன் உள்ளிட்ட படக்குழுவினர் அனைவரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

ஹபீபி ஒரு தமிழ் முஸ்லிம் குடும்பத்தின் வாழ்க்கையைப் பல காலகட்டங்களாகச் சொல்கிறது. அந்தக் குடும்பம் பாரம்பரியமாக நெசவுத் தொழிலைச் செய்து வாழ்கிறது.

காலப்போக்கில் இயந்திரமயமாக்கலின் விளைவாக கைத்தறித் தொழில் வீழ்ச்சியடைய, அந்த ஊரில் இந்தத் தொழிலை நம்பியிருந்த குடும்பங்களின் ஆண்கள் பலர் வாழ்வாதாரத்திற்காக வளைகுடா நாடுகளுக்குச் செல்கின்றனர். இது அந்தக் காலத்தில் எல்லாத் தொழில்களும் எதிர்கொண்ட ஒரு நெருக்கடி. இயந்திரமயமாக்கலின் விளைவாக, ஆண்டாண்டு காலமாகச் செய்து வந்த தொழிலை விட்டுவிட்டு அநேகர் தங்களுக்குக் கிடைக்கும் வேலைக்குச் சென்றனர்.

அப்படியொரு நெருக்கடியான சூழலில்கூட யூசுஃப் வைராக்கியமாக அந்தத் தொழிலைத் தொடர்கிறார். அவரது தம்பி சேக் உதுமான் வெளிநாட்டுக்குப் போய்விட, அவரின் கனவாகவும் நம்பிக்கையாகவும் மகன் அபுதாஹிர் இருக்கிறான். அபுதாஹிர் சிறு வயது முதலே நிலோஃபரை விரும்புகிறான். அவனுக்கு வெளிநாடு போவதில் ஆர்வமோ விருப்பமோ இல்லை. நிலோஃபரை திருமணம் செய்துகொண்டு ஊரிலேயே எளிமையாக வாழ நினைக்கிறான். அவனது சாச்சி சாலிஹா தன் கணவர் சேக் உதுமானைப் பிரிந்து அனுதினமும் தவிப்பதைப் பார்த்ததால் அவனுக்கு அப்படியான எண்ணம்.

நிலோஃபருடனான அவனது காதல் என்ன ஆனது, அந்தக் காதலால் அபூ என்னவெல்லாம் எதிர்கொள்கிறான், காலமாற்றத்தால் யூசுஃபும் அவரது குடும்பமும் எப்படியான சவால்களையும் மாற்றங்களையும் சந்திக்கிறார்கள் என்பதை இயல்பாகவும் உணர்வுப்பூர்வமாகவும் ஹபீபி முன்வைக்கிறது.

படம் வளைகுடா வாழ்க்கையைப் பற்றியது அல்ல. வளைகுடாவுக்குச் செல்பவர்கள், அவர்கள் சென்றதற்குப் பின்னால் அவர்களுக்காகக் காத்திருக்கும் குடும்பங்கள் என இங்குள்ள வாழ்க்கையைப் பற்றியது. யூசுஃபுடைய குடும்ப அனுபவத்தின் வழியாக அக்கால வாழ்வாதாரச் சிக்கல்கள், புலம்பெயர்வு, காத்திருப்பு, குடும்ப, சமூக உறவுகள், சமூக மாற்றங்கள் எனப் பல்வேறு விஷயங்களை இத்திரைப்படம் நேர்த்தியுடன் சித்திரிக்கிறது.

## பண்பாட்டு ஆவணம்

ஹபீபி ஒரு திரைப்படம் என்பதைத் தாண்டி அதை தமிழ் முஸ்லிம்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் மானுடவியல் ஆவணம் என்றும் சொல்லலாம். ஹபீபியின் கதை தெளிந்த நீரோடை போல ஒருபக்கம் ஓடிக்கொண்டிருக்கும்; மறுபக்கம் திரைப்படம் நெடுக முஸ்லிம்களின் சமய நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உடை, பெருநாள், இலக்கியம், வாழ்க்கையின் இதர முக்கிய நிகழ்வுகள் என எல்லாமும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

படத்தின் தொடக்க காட்சிகளில் யூசுஃபின் தாய் உளூ எனும் அங்க சுத்தி செய்துகொண்டிருப்பார். அதுபோல, அபுதாஹிர் பிறக்கும்போது, குழந்தையின் செவிகளில் அல்லாஹு அக்பர் என்றும், லா இலாஹ இல்லல்லாஹ் என்றும் யூசுஃப் கூறுவார். அதைத் தொடர்ந்து தொழுகைக்கான அழைப்பொலி கேட்கும். இந்தக் கலவை பெரும்பாலும் தீவிரவாதிகள் சார்ந்த காட்சிகளில் இடம் பெறுவது தானே வழக்கம் என்று உங்களுக்குத் தோன்றலாம். அந்தப் பொதுமைப்படுத்தலுக்கு கன்னத்தில் அறையை தன் இடக்கையால் கொடுத்திருக்கிறது ஹபீபி. முஸ்லிம்களின் வாழ்க்கையில் அவை எப்படி உள்ளனவோ அப்படியே பதிவு செய்திருக்கிறது.

இஸ்லாத்தில் பற்றுறுதியுடன் இருப்பது பிரச்னைக்குரியதாகச் சித்திரிக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் இத்திரைப்படத்தில் அதிகமான இடங்களில் ஸலாம் சொல்லப்படுவதையும், தொழுகைக் காட்சி இடம் பெறுவதையும், அல்லாஹு அக்பர் சொல்லப்படுவதையும் மிகப் பெரிய எதிர் அரசியல் செயல்பாடாகக் கொள்ள முடியும். திரைப்படத்தில் பல அரபுச் சொற்கள் கலந்த அழகிய பாடல்கள் இடம் பெற்றிருப்பதும் ஹபீபியின் தனித்துவமான முயற்சிகளுள் ஒன்று.

பிறப்பு, திருமணம், சுன்னத், வெளிநாட்டுப் பயணம், இறப்பு முதலான நிகழ்வுகள், தமிழ் முஸ்லிம் பண்பாட்டில் அது எப்படி அணுகப்படுகிறது என்பதையெல்லாம் ஹபீபி கச்சிதமாகப் பதிவு செய்திருப்பது உள்ளபடியே வியப்பளிக்கிறது. ஏனெனில் இது ஆவணப்படம் அல்ல. ஆனாலும் திரைக்கதையை முன்நகர்த்திக் கொண்டே ஒரு முழு வாழ்வியல் பதிவையும் படத்தில் லாவகமாக இடம்பெறச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக நேர்த்தியான கலை வேலைப்பாடுகள் வாயிலாக 1980, 1990களை நம் கண்முன் நிறுத்தியிருக்கிறார்கள்.

நாகூர் E.M.ஹனீஃபா பாடல் பல காட்சிகளில் பின்னணியில் ஓடிக்கொண்டிருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதுபோக, அவரின் குரலுக்குச் செயற்கைத் தொழில்நுட்பத்தின் மூலம் உயிர் கொடுத்திருப்பதும், கவிஞர் நாகூர் சலீமின் கப்பலுக்குப் போன மச்சான் பாடலை இத்தனை ஆண்டுகளுக்குப் பின் மக்களை ரசிக்க வைத்திருப்பதும் ஹபீபியின் மற்றொரு சாதனை. இது ஒரு தலைமுறையின் பண்பாட்டு நினைவுகளை மீட்டெடுக்கும் முயற்சியாகவும் அமைகிறது.

வல்லோனே வல்லோனே பாடலின் காட்சிகளும், சாலிஹா சேக் உதுமான் தம்பதியர் சார்ந்த அநேகக் காட்சிகளும் இப்படிப் பலரின் நினைவுகளைக் கிளரக்கூடியவை. அவற்றை அந்தக் காலகட்டத்தைக் கடந்து வந்தவர்கள் தங்களின் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திப் பார்த்து மகிழ்வதை அவதானிக்க முடிகிறது.

## ஒற்றுமைக்கான அறைகூவல்

தமிழ்நாட்டில் முஸ்லிம்களுக்கும் இதர சமூகத்தினருக்கும் பன்நெடுங்காலமாக வலுவான உறவு இருந்து வந்திருக்கிறது. ஹபீபியின் பல்வேறு காட்சிகளில் அது யதார்த்தமாக

காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கு சமய நல்லிணக்கத்தில் விரிசலை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை சில அமைப்புகள் வரிந்து கட்டிக்கொண்டு முன்னெடுப்பதை நாம் அறிவோம். இப்படியான சூழலில் ஹபீபியின் பதிவு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

மயில்வாகனன் கதாபாத்திரம் படத்தில் குறிப்பிடத்தகுந்த ஒன்று. பெருநாளன்று அவருக்காகச் சாப்பாடு எடுத்துச் செல்லும்போது யூசுஃப் தன் மகன் அபூவிடம் சொல்வார்: ‘மேலப் பள்ளிவாசல் கொடிக் கட்டுல மயிலுடைய அப்பா தான் எல்லாவற்றையும் முன்நின்று செய்வார். என் அப்பாவும் அவர் அப்பாவும் சேக்காளி’

எந்த அளவுக்கு பலமான உறவு முஸ்லிம்களுக்கும் சகோதர சமுதாயத்தினருக்கும் மத்தியில் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறது என்பது இந்த உரையாடலின் வழியே கடத்தப்படுகிறது. மயில்வாகனன் அபூவை மருமகன் என்று யூசுஃபிடம் குறிப்பிடுவார். இதேபோல, ஒரு காட்சியில் அபுதாஹிர் வெளிநாடு செல்வதற்காக புகைப்படம் எடுக்க வெல்டன் பாண்டி அண்ணாச்சியின் ஸ்டூடியோவுக்குப் போகும்போதும், பாண்டி அபூவை மருமகனே என்றே விளிப்பதை நீங்கள் கவனிக்கலாம்.

மற்றொரு காட்சியில் இந்திய விடுதலை தினத்தன்று மாவட்ட கல்வி அதிகாரி மதரசாவில் இந்துக்கள் முஸ்லிம்களுக்கு நோன்புக் கஞ்சி காய்ச்சி தருவதைச் சுட்டிக் காட்டிப் பேசுவார். படத்தின் முதல் பாதியில் இடம் பெறும் இப்படியான காட்சிகள் யாவும் சமய ஒற்றுமைக்கான ஹபீபியின் அறைகூவல் என்றால் அது மிகையன்று.

## முஸ்லிம் பெண் பற்றிய சித்திரம்

அறிவும் துணிச்சலும் கொண்ட முஸ்லிம் பெண்ணை இதுநாள் வரை எந்த தமிழ்ப் படமும் காட்டவில்லை. இந்திய அளவிலும் சரி, உலக அளவிலும் சரி பெரும்பாலும் முஸ்லிம் பெண் கதாபாத்திரம் குறித்த சித்திரம் எப்படி இருக்கும்? ஒடுக்குமுறைக்கு உள்ளாகுபவளாக, சுயமற்ற அறிவிலியாக அல்லது தீவிரவாதியாக மட்டுமே அவள் சித்திரிக்கப்படுவாள். இது முஸ்லிம் பெண்களுக்கு இழைக்கப்படும் தொடர் அநீதி. முஸ்லிம் ஆண்கள் ஒடுக்குபவர்களாக, பெண் வெறுப்பாளர்களாக அடையாளப்படுத்தப்படுவார்கள்.

படைப்பாளிகளின் இந்த அறிவுச் சோம்பலுக்கும், இஸ்லாமோஃபோபியாவுக்கும் கதீஜா பர்வீன் கதாபாத்திரத்தின் வழியே சவுக்கடி கொடுத்திருக்கிறது ஹபீபி. வழக்கமான பொதுமைப்படுத்தல்களுக்கு மாற்றமாகவும், தற்கால முஸ்லிம் பெண்களை மனங்கொண்டும் இயக்குநர் மீரா கதிரவன் இந்தக் கதாபாத்திரத்தைக் கச்சிதமாக வடிவமைத்திருக்கிறார். ஒவ்வொரு வசனத்தையும் ஃப்ரேமையும் கவனத்துடன் செதுக்கியிருக்கிறார் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

பர்வீன் ஒரு தைரியமான, தெளிவான, அறிவார்ந்த பெண். படத்தில் அவளுக்கான ஃப்ரேம்கள் அனைத்துமே வண்ணமயமாக இருக்கும். அவள் வரும் காட்சிகள் அனைத்திலும் புத்தகங்களை, செடிகளை அல்லது பறவைகளை நீங்கள் காணலாம். குறிப்பாக புத்தகத்திலிருந்து பிரிக்க முடியாத கதாபாத்திரம் அவள். அபூவை அவள் முதலில் சந்திப்பதும் அஞ்சுமன் நூலகத்தில்தான், அவனிடமிருந்து பிரிவதும் அங்கிருந்துதான்.

> *இஸ்லாத்தில் பற்றுறுதியுடன் இருப்பது பிரச்னைக்குரியதாகச் சித்திரிக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் இத்திரைப் படத்தில் அதிகமான இடங்களில் ஸலாம் சொல்லப்படுவதையும், தொழுகைக் காட்சி இடம்பெறுவதையும், அல்லாஹு அக்பர் சொல்லப்படுவதையும் மிகப்பெரிய எதிர் அரசியல் செயல்பாடாகக் கொள்ள முடியும்.*

கல்யாணம் என்று வந்துவிட்டால் பெண் சம்மதம் முக்கியம் என்று பர்வீனின் அப்பா சொல்வதும், எனக்கு என்ன மஹர் (மணக்கொடை) தருவீர்கள் என்று அபூவிடம் பர்வீன் கேட்பதும் இஸ்லாமிய வழி காட்டலை, பெண் உரிமையை எடுத்துரைக்கும் வசனங்களாக மிளிர்கின்றன. எப்போது பெண் பார்க்க வர வேண்டும் என்பதில் தொடங்கி திருமணத்துக்குச் சம்மதிப்பது,

ஒரு கட்டத்தில் மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்வது வரை எல்லா முக்கிய முடிவுகளையும் பர்வீன் சுயமாக எடுப்பாள். இப்படி சுயமுள்ள ஒரு முஸ்லிம் பெண்ணைக் காட்டியதே ஹபீபியின் மிகப் பெரும் வெற்றிதான்.

## ஹபீபியின் அரசியல்

ஹபீபியின் முதல் பாதி 1980, 1990 காலத்து இஸ்லாமியப் பண்பாட்டுக் கூறுகளை, வாழ்க்கை முறைகளை, வாழ்வியல் சவால்களைக் காட்டுவதுபோல் இரண்டாம் பாதி 2023 காலகட்டத்தை, அதில் எப்படியான பரிமாணத்தை முஸ்லிம் கலாச்சாரம் பெற்றிருக்கிறது என்பதைப் பதிவு செய்கிறது.

இந்தப் படம் முழுக்க அரசியல் இருக்கிறது. அதில் இடம்பெறும் ஒவ்வொரு காட்சியும் வசனமும் அரசியல்தான். ஆம்..! பேசாப் பொருளை, பிறர் தவறாகப் பேசக்கூடிய அல்லது பேச மறுக்கிற ஒரு கருப்பொருளை எடுத்து அதன் உண்மையை உடைத்துப் பேசுவது ஆகப்பெரிய அரசியல் செயல்பாடு இல்லையா?

இயக்குநர் மீரா கதிரவன் ஒரு பேட்டியில் அற்புதமாக இதை விளக்குவார்: 'முஸ்லிம்களுக்கும் விவசாயத்திற்கும் என்ன சம்பந்தம் என்று வடநாட்டு இஸ்லாமிய வெறுப்பாளர் ட்வீட் போடும்போது முஸ்லிம்கள் விவசாயம் செய்து, மௌலூது ஓதி தோட்டம் துரவுமாக வாழ்ந்தார்கள் எனக் காட்டுவது ஓர் அரசியல். தமிழுக்கும் முஸ்லிம்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று பரப்புரை செய்யப்படும்போது காயிதே மில்லத் படத்தைக் காட்டி அதில் 'எங்கள் தமிழ் மொழி எல்லா வளமும் பெற்ற மொழி' என்ற அவரின் கூற்றைச் சுட்டிக்காட்டுவது ஓர் அரசியல்.'



ஹபீபியின் இரண்டாம் பகுதியில் தற்காலத்தைப் பதிவு செய்யும்போது அதில் அரசியல் இன்னும் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தப்படுகிறது. அது குறித்து கூடுதலாக விவாதிக்கப்பட வேண்டும். பர்வீன் கதாபாத்திரத்தை எடுத்துக்கொண்டால் அது முழுமையாக அரசியலின் உருவம்தான்.

முஸ்லிம்கள் நிரம்பிய கூட்டத்தில் பர்வீன் பேசுவார், 'இன்றைய காலகட்டத்தில் பொது மனது மௌனமாக உறங்கிக் கிடக்காமல் பேச வேண்டிய தேவை இருக்கிறது. இன்குலாபின் வரிகளில் சொல்வதென்றால் நமது குரல் சன்னமானதுதான். ஆனாலும் நாம் பேசியாக வேண்டும். ஆம், நாம் பேசியாக வேண்டும்'.

இது இந்தியச் சூழலில் ஒடுக்கப்படும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக முன்நிற்காத பொதுச் சமூகத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்புவதுடன், நம் குரல் சன்னமாக இருந்தாலும் நாம் பேசியாக வேண்டும் என்று முஸ்லிம்களிடம் அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

குடும்பத்தினர் மத்தியில் பிரச்னை எழுந்து அபூவும் பர்வீனும் பிரியும் தருவாயில், 'நான் எதுவுமே பண்ணல', 'அல்லாஹ் அறிய நான் எதுவும் பேசல' என்று அவளை சமாதானப்படுத்த முயற்சிப்பான் அபூ. அதற்கு பர்வீன், 'ஏன் எதுவும் பண்ணல? ஏன் பேசல? ஏன் எனக்காகப் பேசல' என்பாள். அவள் அவனைப் பிரிந்து செல்லும்போது நூலகத்தின் போர்டில் மார்ட்டின் லூதர் கிங்கின் வாசகம் எழுதப்பட்டிருக்கும்: 'இறுதியில் நாங்கள் நினைவில் வைத்திருப்பது எதிரிகளின் வார்த்தைகளை அல்ல, நண்பர்களின் மௌனத்தை!'

இந்த வாசகம் வெறுமனே அபூவுக்கானது மட்டும் தானா, இது யாருக்கானது என்பதை அரசியல் விழிப்புணர்வுள்ள அனைவரும் எளிதில் புரிந்துகொள்வர். அம்பேத்கர், பெரியார், மார்ட்டின் லூதர் கிங், காயிதே மில்லத், அல்லாமா இக்பால், இன்குலாப், நாகூர்

ஹனீஃபா, இந்திய விடுதலைப் போராட்ட முஸ்லிம்கள் என ஹபீபி பேசும் அரசியல் மிக முக்கியமானவை.

பர்வீன் அறையிலுள்ள போஸ்டரில் ஃபலஸ்தீனக் கவிஞர் மஹ்மூத் தர்வீஷ், மகா கவி ரூமியின் பெயர்கள் இடம் பெறுவதை சிலர் கவனித்திருக்கலாம். அவையெல்லாம் ஃப்ரேமில் வெளிப்படும் அரசியல் அன்றி வேறென்ன? மற்றொரு காட்சியில் ‘ஒளிரும் பிறையின் இரு முனைகள்’ என்ற தன் மொழியாக்க நூலை அபூவிடம் கொடுப்பாள் பர்வீன். அது தாகூர், இக்பால் கவிதைகளின் மொழிபெயர்ப்பு.

தாகூரும் அல்லாமா இக்பாலும் இந்தியத் துணைக்கண்டத்தின் இரு மகத்தான கவிஞர்கள், சிந்தனையாளர்கள். இருவருமே தேசத்தை வழிபடும் குறுகிய தேசியவாதத்தின் விமர்சகர்கள். தேசியம் மனிதனைப் பிரிக்கும் எல்லையாக மாறும்போது அது மனித சுதந்திரத்தைச் சுருக்கிவிடும் என்று இருவரும் வெவ்வேறு கோணங்களில் எச்சரித்தனர். அதனால் இவர்கள் இருவரின் இணைவும் முஸ்லிம் அரசியல் பேசும் படத்தில் இடம் பெறுவது எதேச்சையானதல்ல.

இறுதியாக, கலையால் மட்டுமே வெறுப்பை எளிதில் களைய முடியும் என்பதற்கு ஹபீபி சாட்சி. படத்தைக் காண்போர் உணர்வுப்பூர்வமாக அதை அணுகி பாராட்டும் காணொளிகள் இத்திரைப்படம் எடுக்கப்பட்ட நோக்கம் நிறைவேறியிருப்பதையே காட்டுகிறது. படக்குழுவினருக்கு வாழ்த்துகள். இஸ்லாமிய சமுதாயம் மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் கொண்டாட வேண்டிய படம் ஹபீபி.

ஹபீபி முஸ்லிம் சினிமாவுக்கான முதல் முயற்சி என்றாலும் அதை நேர்த்தியாகவும் மிகச் சிறப்பாகவும் படக்குழு செய்திருக்கிறது. இயக்குநர் மீரா கதிரவன் ஹபீபியின் மூலம் ஒரு புதிய திரைப்போக்கிற்கான விதையை விதைத்துள்ளார். அது வேரூன்றி, வளர்ந்து, செழிக்க வேண்டும் என்பதே என்னைப் போன்ற பலரின் பேரவா.


HIJAZ
LEATHERS PVT. LTD.,

Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்
## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

TRUST WORTHY

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

• ரியாஸ் மொய்தீன்

# வரலாறு படைத்த இறுதி வழியனுப்புதல்



இஸ்லாமியக் குடியரசான ஈரான் அந்நாட்டு மக்களைத் துன்புறுத்துவதாகவும், மக்கள் அரசின் மீது அதிருப்தியில் இருப்பதாகவும் மேற்கத்திய நாடுகள் கூறிவந்தன. இந்நிலையில் ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அந்நாட்டு மக்களுக்கு விடுதலை பெற்றுத்தரப் போவதாகக் கூறிக்கொண்டு எதேச்சதிகார அமெரிக்கா 2026 பிப்ரவரி 28 அன்று ஈரானின் பல இடங்களில் தாக்குதல் தொடுத்தது.

குறிப்பாக இஸ்லாமியக் குடியரசு ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் அமைந்துள்ள தலைவர் அலீ கமேனியின் அலுவலக வளாகத்தின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 86 வயதான ஆயத்துல்லாஹ் அலீ கமேனி, அவருடைய குடும்பத்தார், இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின்(IRGC) சில முக்கியத் தலைவர்கள் வீரமரணம் அடைந்தனர்.



ஆயத்துல்லாஹ் அலீ கமேனி

போர்ச் சூழல் காரணமாக கமேனியின் உடலை அடக்கம் செய்யாமல் வைத்திருந்தனர். பின்னர் அமெரிக்காவுடன் முதற்கட்ட அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில் 2026 ஜூலை 4ஆம் தேதி முதல் ஜூலை 9ஆம் தேதி வரை கமேனியின் உடல் மக்களின்

பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

2026 ஜூலை 5 அன்று ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள கிராண்ட் முஸல்லா பள்ளிவாசலில் 2 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஆயத்துல்லாஹ் அலீ கமேனியின் உடலுக்கு மரியாதை செலுத்த கூடினர். கமேனியின் உடல் ஈரானின் தெஹ்ரானில் இருந்து கோமிற்கும், கோமிலிருந்து ஈராக்கின் நஜாஃப், கர்பலாவிற்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மக்கள் 10 முதல் 12 மணி நேரத்திற்கும் மேல் காத்திருந்து கமேனியின் உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

ஈரானில் மட்டுமின்றி ஈராக்கிலும் ஆயத்துல்லாஹ் அலீ கமேனியின் உடலுக்கு மரியாதை செலுத்த மக்கள் அலைகடலாகத் திரண்டனர். இதுவே மனித வரலாற்றில் ஒரு தலைவரின் உடலுக்கு மரியாதை செலுத்த ஒன்று திரண்ட அதிகப்படியான மக்கள் கூட்டமாகும். அங்கு கூடியிருந்த மக்கள் இந்த கோழைத்தனமான செயலைச் செய்தவர்களை நிச்சயமாக பழி தீர்த்தே ஆக வேண்டும் என முழக்கமிட்டனர். பலர் அழுதுகொண்டே இருந்தனர்.

இன்னும் பலர் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராகவும் ஈரான் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் முழங்கினர். தங்கள் உயிர்களுக்கு ஆபத்து இருக்கும் நிலையிலும் ஈரானின் அனைத்து முக்கியத் தலைவர்களும் இறுதி நிகழ்வில் மக்களுடன் மக்களாகப் பங்கேற்றனர். அலீ கமேனியின் உடலுக்கு மரியாதை செலுத்த ஏறத்தாழ 100க்கும் அதிகமான நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

எந்த ஈரானை பிற நாடுகளிடம் இருந்து அந்நியப்படுத்தி, உள்நாட்டு மக்களை அரசாங்கத்திற்கு எதிராகத் திருப்பி விடவேண்டும் என மேற்கத்திய நாடுகள் எண்ணியதோ அதற்கு முற்றிலும் முரணாகவே ஆயத்துல்லாஹ் அலீ கமேனியின் இறுதி நிகழ்வில் நடந்தது.

கமேனியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களைக் கொன்றழிக்கலாம் என்ற அமெரிக்காவின் கனவை கமேனியின் உயிரற்ற

**இஸ்ரேல், அமெரிக்காவின் முன் ஒரு போதும் நாங்கள் அடிபணிய மாட்டோம் என்பதற்கான உறுதிப்பாடுதான் இந்த நிகழ்வு.**

---

**ஒரு மாபெரும் தலைவரின் அநீதியான படுகொலைக்கு நீதி கேட்டுத் திரண்ட கோடான கோடி மக்கள் உலக மனசாட்சியைத் தட்டியெழுப்பிய தருணம் தான் இது.**

---

**சத்தியம் வெல்லும்
அசத்தியம் அழியும்
அசத்தியம் அழிந்தே தீரும் என்பதைத்தான் உலகிற்குச் செய்தியாக ஈரான் இதன் மூலம் சொல்லியிருக்கிறது.**

---

**அமெரிக்காவிற்கும், இஸ்ரேலுக்கும் அடிபணிந்து வாழும் கோழைகளின் வாழ்வை விட ஒரு வீரச் சாவு எத்தனை அர்த்தமுள்ளது என்பதை இஸ்லாமிய நாடுகளுக்கும் சேர்த்தே ஈரான் சேதி சொல்லியிருக்கிறது.**

---

**வாழும் போது இஸ்ரேலுக்கும், அமெரிக்காவிற்கும் போராளிகள் எப்படி சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார்களோ அவர்கள் இறந்த பிறகும் கூட எதிரிகளுக்கு பீதியைத் தருபவர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை வரலாற்றில் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது ஈரான்.**



உடல் உடைத்து நொறுக்கியிருக்கிறது. உலக நாடுகளிலிருந்து வந்த தலைவர்கள், தங்கள் உயிரைப் பொருட்படுத்தாத ஈரானின் அடுத்த கட்டத் தலைவர்கள், பொதுமக்கள் ட்ரம்பின் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கினர். வீரர்கள் இறந்தாலும் வீரர்களாகவே அடக்கம் செய்யப்படுகிறார்கள்.

இந்த இறுதி நிகழ்வில் இலட்சக்கணக்கான மக்கள் கூடுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ட்ரம்ப், 'ஈரானிய மக்கள் கமேனியை எதிர்க் கிறார்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஒருவேளை இது பொய்யான கண்ணீராக இருக்கலாம்' என விமர்சித்தார்.

ஈரானைக் குறித்து மேற்குலகம் கட்டி எழுப்பிய அனைத்து பிம்பங்களும் கமேனி யின் இறுதி நிகழ்வின் மூலம் சுக்கு நூறாக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ஈரான் உலகிற்குப் பல முக்கியச் செய்திகளை வலுவாகத் தெரி வித்துள்ளது. ஈரான் மக்கள் அரசுடன்தான் இருக்கின்றார்கள் என்பதற்கான வரலாற்றுப் பிரகடனம் இது. இஸ்ரேல், அமெரிக்காவின் முன் ஒரு போதும் நாங்கள் அடிபணிய மாட் டோம் என்பதற்கான உறுதிப்பாடுதான் இந்த நிகழ்வு.

ஒரு மாபெரும் தலைவரின் அநீதியான படுகொலைக்கு நீதி கேட்டுத் திரண்ட கோடான கோடி மக்கள் உலக மனசாட்சி யைத் தட்டியெழுப்பிய தருணம் தான் இது. சத்தியம் வெல்லும் அசத்தியம் அழியும் அசத்தியம் அழிந்தே தீரும் என்பதைத்தான் உலகிற்குச் செய்தியாக ஈரான் இதன் மூலம் சொல்லியிருக்கிறது.

அமெரிக்காவிற்கும், இஸ்ரேலுக்கும் அடி பணிந்து வாழும் கோழைகளின் வாழ்வை விட ஒரு வீரச் சாவு எத்தனை அர்த்தம் உள்ளது என்பதை இஸ்லாமிய நாடுகளுக்கும் சேர்த்தே ஈரான் சேதி சொல்லியிருக்கிறது. வாழும் போது இஸ்ரேலுக்கும், அமெரிக்கா விற்கும் போராளிகள் எப்படி சிம்ம சொப் பனமாகத் திகழ்ந்தார்களோ அவர்கள் இறந்த பிறகும் கூட எதிரிகளுக்கு பீதியைத் தருப வர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை வரலாற் றில் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது ஈரான்.

இந்த இறுதி விடைபெறல் ஒரு புதிய அத்தியாயத்திற்கான தொடக்கமாக அமைந்து விடக் கூடாது என இஸ்ரேலும், அமெரிக் காவும் அஞ்சினாலும் இது ஒரு புதிய அத்தி யாயத்தின் தொடக்கமே!



# நல்லறங்கள் என்றால் என்ன?

● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி

● தமிழில் : டி அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

எந்தவொரு அறத்தையும் நல்லறமாக (ஸாலிஹான அமலாக) ஏற்றுக் கொள்வதற்கு குர்ஆன் விரிவுரையாளர்கள் பொதுவாக இரண்டு நிபந்தனை களை விதிக்கின்றார்கள்.

*(1) இக்லாஸ் - உளத்தூய்மை (2) ஸவாப் - பொருத்தம்.*

இக்லாஸ் என்பதற்கு ‘அந்த நல்லறம் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்; அவனுக்கு மட்டுமே கீழ்ப்படிந் து அவனுடைய உவப்பைப் பெறுவதையே ஒற்றை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்’ என்று பொருள்.

ஸவாப் என்பதற்கு ‘அந்த நல்லறம் நபிகளாரின் அழகிய நடைமுறைக்கு இயைந்து போவதாய், இஸ்லாமிய ஷரீஅத் வரையறுத்துள்ள முன்னுரிமைகளோடு பொருந்திப் போவதாய் இருக்க வேண்டும்’ என்று பொருள். அதாவது ஃபர்ளான கடமைகள், வாஜிபானவை, சுன்னத்தானவை, முஸ்தஹப்பானவை ஆகியவற்றைச் சேர்ந்ததாக இருக்கும். முஹர்ரமாத் (தடுக்கப்பட்டவை), மக்ரூஹாத் (அருவருப் பானவை) ஆகியவற்றைச் சேராதவையாய் இருக்கும்.

அல்லாஹ்வின் உவப்பைப் பெறக் கூடிய, நபிகளாரின் அழகிய நடை முறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படக் கூடிய நல்லறங்கள் எவை என்பது தான் அசல் கேள்வி. பொதுவாக சில வழிபாடுகள், அவ்வப்போது வழங்கப் படுகின்ற ஸதகாக்கள், தர்மங்கள், மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட நன்மையான செயல்கள் வரையில் ஸாலிஹான அமலுக்கான பொருளைக் குறுக்கி விடுகின்றார்கள். ஆனால் குர்ஆனிலும் நபிமொழியிலும் அமலே ஸாலிஹ் என்கிற சொற்றொடர் மிகவும் விரிவான பொருளில் கருத்துச் செறிவு மிக்கதாய் ஆளப்படுகின்றது.

ஸாலிஹ் அல்லது ஸாலிஹாத் ஆகிய சொற்களின் வேர்ச் சொல் ‘சுலஹ்’ என்பதாகும். அரபி மொழியியலின் படி இந்தச் சொல் உண்மையில் ‘ஃபஸாத்’ என்கிற சொல்லின் எதிர்ச் சொல் ஆகும். ஃபஸாத் என்பதற்கு குழப்பம் என்று பொருள். குழப்பமே இல்லாத, குழப்பத்திற்கு இடம் தராத, குழப்பத்துக்கு அப்பாற்பட்ட, நன்மையை மட்டுமே தரக்கூடிய செயலுக்குப் பெயர்தான் ஸுலாஹ். ஷஅராவி என்கிற விரிவுரையாளர் இந்தச் சொல்லுக்கு விளக்கம் அளிக்கின்ற போது எழுதுகின்றார்:

‘தமக்கோ பிற மனிதர்களுக்கோ நன்மை அளிக்கின்ற செயல்களுக்குப் பெயர்தான் ஸாலிஹான அமல்கள் என்பதாகும். இவற்றுக்கான மிக மிகக் குறைந்தபட்ச அளவுகோல் என்னவெனில் எந்தவொரு நன்மை அளிக்கின்ற பொருளையும் அழியாமல் நிலைத்திருக்க வைப்பதாகும். எடுத்துக்காட்டாக ஒரு கிணறு இருக்கின்றது; அதிலிருந்து மக்கள் தண்ணீர் அருந்துகின்றார்கள், பயன் பெறுகின்றார்கள் எனில் அதனை அடைத்து விடவும் கூடாது; அதனை மாசடையவும் விடக் கூடாது. நன்மையின் தரத்தை உயர்த்த நாடுகின்றீர்கள் எனில், அதன் பயன் தருகின்ற திறனை - அதிகப்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக மாசடைவதிலிருந்து பாதுகாப்பதற்காக அதற்கான சுற்றுப் புறச் சுவர்களைக் கட்டுங்கள். அல்லது அதனை இன்னும் ஆழமாகத் தோண்டி அதன் ஆழத்தை அதிகப்படுத்துங்கள்’.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் மிக அழகாக, இரத்தினச் சுருக்கமாக ஒற்றை வரியில் இதற்கான விளக்கத்தைத் தந்திருக்கின்றார்கள்: ‘எந்த அறத்தில் அதிகமதிகமாக அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்ற தன்மை இருக்கின்றதோ, அறத்தைச் செய்பவர்களுக்காக அதிகமதிகமாக நன்மையும் பயனும் கொட்டிக் கிடக்கின்றதோ, அதுதான் அமலே ஸாலிஹ் - ஸாலிஹான அமல் ஆகும்’.

அல்லாமா யூசுஃப் கர்ளாவி கூறுகின்றார்: ‘அமலே ஸாலிஹ் அல்லது ஸாலிஹான அமல் என்பது ஓர் அழகான, கருத்துச் செறிவுமிக்க குர்ஆனியச் சொல் ஆகும். இதில் வாழ்க்கைக்கு அழகூட்டுகின்ற, வாழ்வை மேம்படுத்துகின்ற அத்துணை செயல்களும் (அவை உலக நலன்களோடு தொடர்புடையவையாக இருந்தாலும் சரி, ஆன்மிக நலன் சார்ந்தவையாக இருந்தாலும் சரி, தனிப்பட்ட வாழ்வோடு அல்லது கூட்டு வாழ்வோடு தொடர்புடையவையாக இருந்தாலும் சரி) அடங்கும். தனிமனிதர்களுக்கு நன்மையளிக்கின்ற எந்தவொரு செயலும், குடும்பங்களுக்குச் சிறப்பு சேர்க்கின்ற எந்தவொரு செயலும், சமூக வாழ்வில் சீர்திருத்தங்களை மலரச் செய்கின்ற எந்தவொரு செயலும் ஸாலிஹான அமலாகத்தான் கருதப்படும்’.

> **“ஸாலிஹான அமல்கள் விவசாயிகளின் கைகளில் இருக்கின்ற ஏர், கலப்பை ஆகியவற்றின் வடிவிலும், தையற் கலைஞரின் ஊசியின் வடிவிலும், எழுத்தாளரின் எழுதுகோலின் வடிவிலும், மருத்துவரின் கத்தியின் வடிவிலும், மருந்தாளுநரின் குப்பிகளின் வடிவிலும் வெளிப்படும்.”**

இறைவனை வழிபடுவதற்கான வடிவங்கள், சடங்குகள் என ஸாலிஹான அமல்களைக் குறுக்கிவிடுகின்ற தவறான கருத்தைக் களைகின்ற விதத்தில் புகழ்பெற்ற இக்வானி எழுத்தாளர் முஹம்மத் கஸ்ஸாலி (ரஹ்) எழுதுகின்றார்: ‘ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் இந்த உலகத்தின் விவகாரங்களைப் பற்றி அறியாதவர்களாக, அன்றாடப் பிரச்னைகளை எதிர்கொண்டு தீர்க்கின்ற திறன் அற்றவர்களாக இருப்பார்களேயானால் ஒரு வெற்றிகரமான, இலட்சியம் சார்ந்த, இலட்சியப் பணியில் ஒருமுகமாக இயங்குகின்ற சமூகத்தை ஒருபோதும் நிறுவவே முடியாது. இப்படிப்பட்ட வெற்றிகரமான, இலட்சியம் சார்ந்த, ஒருமுகமாக இயங்குகின்ற சமூகத்தைக் கட்டமைப்பதற்குத் தேவையான ஸாலிஹான அமல்கள் விவசாயிகளின் கைகளில் இருக்கின்ற ஏர், கலப்பை ஆகியவற்றின் வடிவிலும், தையற் கலைஞரின் ஊசியின் வடிவிலும், எழுத்தாளரின் எழுதுகோலின் வடிவிலும், மருத்துவரின் கத்தியின் வடிவிலும், மருந்தாளுநரின் குப்பிகளின் வடிவிலும் வெளிப்படும். முத்து எடுப்பவர் துணிகரமாகப் பாய்கின்ற பெருங்கடலின் ஆழங்களிலும், விமான ஓட்டிகள் விமானங்களை ஓட்டிச் செல்கின்ற வானவெளிகளிலும், ஆய்வாளர்

களின் சோதனைச் சாலைகளிலும், கணக்கர் களின் பேரேடுகளிலும் இந்த ஸாலிஹான அமல்கள் அரங்கேறுகின்றன.

ஒரு முஸ்லிம் சத்திய மார்க்கத்தின் இலட்சியப் பணியைக் கையில் ஏந்தியவாறு, தன்னுடைய அதிபதியின் பேருதவியோடும், அவனுடைய வாக்கை மேலோங்கச் செய்கின்ற எண்ணத்தோடும் (தத்தமது களத்தில்) செய்கின்ற பயனுள்ள பணிகள் அனைத்துமே ஸாலிஹான பணிகளின் வகையில் சேரும்'.

ஸாலிஹான அமல் பற்றிய இந்த பரந்து விரிந்த பொருளுக்கு வலுச் சேர்க்கின்ற விதத்தில் மகத்துவம் மிக்க குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். எல்லாம் வல்ல இறைவன் அறிவிக்கின்றான்:

'நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக, அல்லாஹ்வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் - மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும், தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையில் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர். இவர்களே உண்மையாளர்கள். மேலும் இவர்களே இறையச்சமுள்ளவர்கள்'. (திருக்குர்ஆன் 2:177)

நற்கூலி கிடைக்கும் என்கிற எண்ணத்துடன் மனைவி, மக்களுக்காகச் செலவிடு

**தீமைகள், பாவங்கள் ஆகியவற்றுடன் சோம்பல், பணிகளில் ஈடுபடாமல் இருத்தல், முடங்கிக் கிடத்தல், செயல்களின் பலவீனம் ஆகியவையும் ஸாலிஹான அமல்களுக்கு நேர் எதிரான செயல்களாய் உரைக்கப்பட்டிருக்கின்றன.**

வதும் நல்லறமாக நபிமொழிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயணத்தின்போது பயணி ஒருவருக்கு உதவுவதும், (நாய் அல்லது வேறு ஏதேனும் ஒரு) பிராணிக்குத் தண்ணீர் புகட்டுவதும், கடனாளிகளுக்கு (அவர்கள் பெரும் செல்வந்தர்களாகவே இருந்தாலும்) கால அவகாசத்தை நீட்டிப்பதும், சாலையில் மக்களுக்குக் கேடு விளைவிக்கின்ற பொருள் ஏதேனும் இருந்தால் அதனை அப்புறப்படுத்துவதும், உறவினர்களுடன் நல்ல முறையில் பழகுவதும், அவர்களுடன் நல்ல உறவுமுறையைப் பேணுவதும், மக்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளும், இன்னும் சொல்லப் போனால் கணவன் - மனைவிக்கிடையே சமரசம் செய்து வைத்தலும் கூட நன்மையான செயல்களாய், நல்லறங்களாய் நபிமொழிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியை அடைவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சி, கற்பித்தல், போதித்தல், பயிற்றுவித்தல், நீதி செறிந்த அரசியலும் அரசாட்சியும், உண்மையின் அடிப்படையிலான வணிகம், வேளாண்மை போன்ற தொழில் சார்ந்த பணிகளும் கூட நபிமொழிகளில் ஸாலிஹான அமல்களாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஸஹீஹ் புகாரி, சுனன் இப்னு மாஜா, சுனன் அபூதாவூத் ஆகியவற்றில் கிதாபுல் அதப் பாகத்திலும், ஸஹீஹ் முஸ்லிம், சுனன் திர்மிதி ஆகியவற்றில் கிதாபுல் பிர்

வல்ஸிலா பாகத்திலும் பதிவாகியிருக்கின்ற நபிமொழிகளின் பட்டியலை ஒரு முறை வாசித்தாலேயே இஸ்லாத்தில் ஸாலிஹான அமல் எது என்பதைப் பற்றிய கருத்தோட்டம் எந்த அளவுக்குப் பரந்து விரிந்ததாக, அனைத்தையும் தழுவியதாக, பல்வகைப்பட்டதாய் இருக்கின்றது என்பதையும் என்னென்ன வகையான செயல்கள் ஸாலிஹான அமல்களின் கீழ் வருகின்றன என்பதையும் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

இங்கு இத்துணை மேற்கோள்களும் வசனங்களும் நபிமொழிகளும் பகிரப்பட்டதன் நோக்கமே இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் பார்க்கின்ற போது ஆகுமானதாக இருக்கின்ற, மற்ற மனிதர்களுக்கும் உலகத்துக்கும் பயனும் நன்மையும் அளிக்கின்ற அத்துணை செயல்களும் ஸாலிஹான அமல்கள்தாம் என்பதையும் இத்தகைய நல்லறங்கள் ஒரு சமூகத்தின் பழக்கங்களாய் மாறிவிடுகின்ற போது அந்தச் சமூகத்திற்கு வெற்றிக்கான, வளர்ச்சிக்கான வாயில்கள் திறக்கத் தொடங்கிவிடுகின்றன என்பதையும் தெளிவுபடுத்துவது தான் நோக்கமே.

### ‘ஸாலிஹான அமலுக்கு நேர் எதிரான செயல் எது?’

பொதுவாக பாவங்களும் தீமைகளும் தாம் ‘ஸாலிஹான அமலுக்கு நேர் எதிரான செயல்களாய்’ பார்க்கப்படுகின்றன. ஆனால் குர்ஆன், நபிமொழி, நபிவழி ஆகியவற்றின் ஒளியில் பார்க்கின்ற போது தீமைகள், பாவங்கள் ஆகியவற்றுடன் சோம்பல், பணிகளில் ஈடுபடாமல் இருத்தல், முடங்கிக் கிடத்தல், செயல்களின் பலவீனம் ஆகியவையும் ஸாலிஹான அமல்களுக்கு நேர் எதிரான செயல்களாய் உரைக்கப்பட்டிருக்கின்றன. கீழ்க்கண்டவற்றையும் ஸாலிஹான அமல்களுக்கு நேர்மாறான செயல்களாய், ஸாலிஹான அமல்களில் ஈடுபட விடாமல் தடுக்கக் கூடியவையாய் சொல்லலாம்.

### 1. முடக்கம், தேக்கம், பொறுப்பற்றத் தனம், செயல்படத் தவறுதல்

திருக்குர்ஆன் அறிவிக்கின்றது: ‘மேலும், தங்களுடைய கைகளை (நன்மையானவற்றை விட்டு) முடக்கிக் கொள்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வை மறந்ததனால் அல்லாஹ்வும் அவர்களை மறந்தான்! திண்ணமாக இந்நய வஞ்சகர்கள் தீயவர்கள்தாம்! (திருக்குர்ஆன் 9:67)

‘வயக்பிசூனா அய்தியஹும்’ (தங்களுடைய கைகளை முடக்கிக் கொள்கின்றார்கள்) என்பதற்கு விளக்கம் அளிக்கின்ற போது இமாம் குர்தூபி அவர்கள் எழுதுகின்றார்கள்: ‘ஜிஹாதைக் கைவிடுவதை இது குறிக்கும். மேலும் அவசியமான அறங்களின் விஷயத்தில் தம்முடைய கைகளைத் தடுத்து வைத்துக் கொள்ளுவதையும் இது குறிக்கும். மறந்து போவது என்பது நல்லறங்களைப் பற்றிய அக்கறையின்மையையும் அவற்றைச் செய்யாமல் விட்டுவிடுவதையும் குறிக்கும்’. அன்பு நபிகளாரும், ‘பாதிரூ பில் அஃமால்’ (செயல்படுவதில் விரைந்து இயங்குங்கள்) என்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.



### 2. அலட்சியம், கவனக்குறைவு, அக்கறையின்மை

குர்ஆன் அறிவிக்கின்றது: ‘மேலும், அலட்சியமாய் இருப்போரில் நீரும் ஒருவராகிவிடாதீர்..! (திருக்குர்ஆன் 7:205)

'அல்லாஹ்வின் அடியானாக இருக்கின்றோம்' என்கிற உணர்வு எங்கேயும் எப்போதும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உயிர்த்துடிப்போடு இருக்க வேண்டும். மேலும், அந்த உணர்வு ஒருபோதும் மங்கிவிடுவதற்கோ அலட்சியத்துக்கு ஆளாகிவிடுவதற்கோ இடம் தரக்கூடாது என்பதுதான் தொழுகை, திக்ரு ஆகியவற்றின் நோக்கமும் என இந்த வசனங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த உணர்வு தான் அடியானை எந்நேரமும் ஸாலிஹான அமல்களின் பக்கம் கவனம் செலுத்த வைக்கின்றது. நபிகளாரும், 'முந்தைய சமூகத்தாரைப் போன்று நீங்களும் உலகத்திற்குப் பின்னால் ஓடோடிச் சென்று நல்லறங்களின் விஷயத்தில் அலட்சியமாகிவிடுவீர்களோ என்றே நான் அஞ்சுகின்றேன்' என்று தம்முடைய அச்சத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

### 3. தட்டிக் கழித்தல், தள்ளிப்போடுதல் (Procrastination)

இப்போதெல்லாம் பணிகளைத் தள்ளிப் போடுதல் (Procrastination) குறித்து அதிகமாக விவாதிக்கப்படுகின்றது. தள்ளிப் போடுதல் என்றால் என்ன? ஒரு வேலையின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அவசியத்தையும் நல்ல முறையில் அறிந்து உணர்ந்துவிட்ட பிறகும், அதனைத் தாமதம் செய்வதால் என்னென்ன இழப்புகளுக்கு ஆளாக நேரிடும் என்பதை நன்கு அறிந்துகொண்ட பிறகும், வேண்டுமென்றே வலிந்து, எந்தவொரு அறிவார்ந்த காரணமும் இன்றி அந்த வேலையைச் செய்யாமல் இறுதிக் கட்டம் வரை தள்ளிப் போடுவதாகும்.

நல்லறங்களைச் செய்வதில் அதிலும் ஃபர்ளான வழிபாடுகளைச் செய்வதில் இது போன்ற சோம்பலும், சாக்குப் போக்குச் சொல்லி தள்ளிப்போடுதலும் எந்த வகையிலும் விரும்பத்தக்கதல்ல. திருக்குர்ஆன் தொழுகையில் சோம்பல்படுவதை நயவஞ்சகத்தின் அறிகுறியாக அறிவிக்கின்றது: 'இவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் சோம்பல் பட்டுக்கொண்டே நிற்கின்றார்கள்' (திருக்குர்ஆன் 4:142)

நபிகளாரும் சோம்பலிலிருந்தும் இயலாமையிலிருந்தும் அல்லாஹ்விடம் புகலிடம் தேடி இறைஞ்சியிருக்கின்றார்கள்.

### 4. உணர்வற்ற ஜடத்தனமும் தனித்துவ மோகமும்

ஸாலிஹான அமல்களைச் செய்வதில் பெரும் தடையாக இருப்பது உணர்வுகள் மரத்துப் போவதும், தனித்துவ மோகமும்தாம். அதாவது தான் உண்டு, தன் தொழில் உண்டு; தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்றவாறு மற்றவர்களுடன் எந்தத் தொடர்பையும் வைத்திராமல் பட்டும்படாமல் வாழ்வதும், தம்மை ஒரு சின்ன வட்டத்துக்குள் அடைத்துக் கொள்வதும்தான் தனித்துவ மோகம். உணர்வற்றுக் கிடப்பதையும் இது போன்ற வரம்பு மீறிய தனித்துவ மோகத்தையும் இஸ்லாம் விரும்புவதில்லை. தீமை நடப்பதைப் பார்த்தும் கண்டும் காணாமல் இருந்து விடுபவர்களை குர்ஆன் கண்டிக்கின்றது; 'தாம் செய்து கொண்டிருந்த தீய செயலிலிருந்து அவர்கள் ஒருவரையொருவர் தடுக்காமல் இருந்தார்கள்'. (திருக்குர்ஆன் 5:79).

'இறைநம்பிக்கையாளர்கள் ஒருவருக்கொருவர் அன்பும், கருணையும், பரிவும் காட்டுவதில் ஓர் உடலைப் போன்றவர்களாவர்' என்றே நபிமொழியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மனிதன் தன்னுடைய சுயம் எனும் கூண்டுக்குள் அடைபட்டிராமல் அதிலிருந்து வெளி வந்து மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலன்களுக்காக வாழ்வதற்கும், பாடுபடுவதற்கு முன்வர வேண்டும். சமூகத்தில் நன்மைகள் ஓங்குவதற்கும், அது சீர்பெறுவதற்கும் கருவியாகப் பயன்பட வேண்டும். சமூகத்துக்குப் பயனும் நன்மையும் அளிப்பவர்களாக மாற வேண்டும்.

ஸாலிஹான அமல்கள் எத்தகையதாய் இருக்க வேண்டும்? என்பதைப் பற்றிய விவரங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

# உலக வாழ்க்கையின் சாராம்சம்
# இதுதான்; இவ்வளவுதான்!

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

வாழ்வின் தொடக்கம் குழந்தைப் பருவம். இந்தப் பருவத்தை திருக்குர்ஆன் விளையாட்டுப் பருவம்(லஇப்) எனக் குறிப்பிடுகிறது. குழந்தைகள் எப்போதும் ஓடி, ஆடி, விளையாடி மகிழ்ச்சியில் மூழ்கியிருப்பார்கள். அடுத்த பருவம் பள்ளிப் பருவம் அல்லது இடைநிலைப் பருவம். இந்தப் பருவத்தை திருக்குர்ஆன் கேளிக்கைகளில் கழியும் பருவம் (லஹ்வு) என வர்ணிக்கிறது.

முதல் பருவம் வெறும் பொழுது போக்குகளைக் குறிக்கும். 'லஹ்வ்' என்பது மனதையோ நேரத்தையோ மிக முக்கியமான ஒன்றிலிருந்து விலக்குகின்ற எதனையும் குறிக்கும். உதாரணமாக, அலைப்பேசியில் அல்லது விளையாட்டுப் போட்டியொன்றில் மூழ்கி தொழுகையையோ மற்றொரு கடமையையோ விட்டுவிடுவதைக் கூறலாம். அறிஞர்கள் கூறுவர்: 'ஒவ்வொரு லஹ்வும் விளையாட்டாக இருக்கலாம்; ஆனால் ஒவ்வொரு விளையாட்டும் லஹ்வாக இருக்காது.'

மூன்றாம் பருவம் இளமைப் பருவம். இதனை அலங்காரத்தை விரும்பும் பருவமாக (ஸீனா) திருக்குர்ஆன் அடையாளப்படுத்துகிறது. இது வெளித் தோற்றம், அழகு ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்துவதைக் குறிக்கும். இந்நிலை பெரும்பாலும் இளைஞர் பருவத்தில் மேலோங்கும்.

'லஹ்வ்' என்பது பொழுதுபோக்குகளில் ஈடுபாடு காட்டுவதையும், 'ஸீனா' என்பது தோற்றம், அலங்காரத்தில் ஈடுபாடு கொள்வதையும் குறிக்கும்.

நான்காம் பருவம் பட்டம், பதவி, பணம், செல்வாக்கு, புகழ் முதலானவற்றைக் கொண்டு பெருமைப்படும், பெருமை பேசும் பருவம். (தஃபாகுருன் பைனக்கும்). தன்னை மற்றவர்களை விட உயர்ந்தவன் என்று கருதி அதை வெளிப்படுத்துதல் என்பது இதன் பொருள். பணம், பட்டம், பதவி, குலம், கோத்திரம் அல்லது சாதனைகளை வைத்து பெருமை பேசுவதும் இதில் அடங்கும்.

அதனைத் தொடர்ந்து பெற்றிருக்கும் வசதிகள், சொத்து செல்வங்கள், பிள்ளைகள் முதலானவற்றைப் பெருக்குவதில் கவனம் செலுத்தும் பருவம். (தகாஸுர் பில் அம்வால் வல் அவ்லாத்) அதாவது மேலும் மேலும் உலக சுக போகங்களைச் சேர்த்துக்கொள்வதில் காட்டுகின்ற ஈடுபாட்டைக் குறிக்கும்.

'தஃபாகுர்' என்பது பிறருக்கு முன்னால் தமது பெருமையை வெளிப்படுத்துவதையும், 'தகாஸுர்' என்பது தன்னிடம் உள்ள சொத்து செல்வங்களை மேலும் மேலும் அதிகரிப்பதில் காட்டும் ஆர்வத்தையும் குறிக்கும்.

இறுதியாக உலக வாழ்க்கைக்கு விடை கொடுக்கும் கட்டம் வரும். இதுதான் உலக வாழ்க்கையின் சாரம்; சுருக்கமான கதை! இந்த உண்மையை எத்தனை தத்ரூபமாக ஸூரா அல்ஹதீத் விளக்குகிறது என்பதைக் கவனியுங்கள்:

'இந்த உலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையும், வெளிப்பகட்டும் உங்களிடையே ஒருவருக்கொருவர் பெருமையடித்துக் கொள்ளுதல், செல்வங்கள், குழந்தைகள் ஆகியவற்றில் ஒருவரையொருவர்

மிஞ்சிவிட முற்படுதலுமேயன்றி வேறில்லை..' (திருக்குர்ஆன் 57:20)

உலக வாழ்க்கையின் இந்தப் பருவங்கள் எவ்வாறு தொடங்கி, எவ்வாறு முடிவடைகின்றன என்பதைத் திருக்குர்ஆன் ஓர் அற்புதமான உதாரணத்தின் மூலம் தொடர்ந்து விளக்குகிறது:

'..மழை பொழிந்திடும்போது அதன் மூலம் விளைகின்ற தாவரங்களைப் பார்த்து விவசாயிகள் மகிழ்ச்சியடைவது போன்றதாகும். பின்னர், அதே பயிர் காய்ந்து விடுகின்றது. அது மஞ்சளித்துப் போவதையும், பின்னர், பதராகி விடுவதையும் நீர் பார்க்கலாம்..' (திருக்குர்ஆன் 57:20)

***முதல் கட்டம்:*** ஒரு பயிரானது பசுமையாக, பச்சைப் பசேலெனக் காட்சி தரும் பருவம்.


***அடுத்த கட்டம்:*** உலர்ந்து மஞ்சள் நிறமாக மாறும் பருவம்.

***இறுதிக் கட்டம்:*** பதராகி, சிதைந்து, இறுதியில் கூளமாகி, மக்கி, மறையும் நிலை.

ஆனால் வாழ்க்கையின் கதை இத்துடன் முடிவதில்லை. மறுமை என்ற நிலையான ஒரு வாழ்க்கை உண்டு. இந்த உலக வாழ்க்கையைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியவர் அங்கு கடுமையான வேதனையைச் சந்திக்க நேரிடும். அதைச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்களுக்கு மன்னிப்பும் இறைதிருப்தியும் கிட்டும்.

இதனை அடுத்த வசனம் விளக்குகிறது: '..(இதற்கு மாறாக) மறுமை எத்தகைய இடமெனில், அங்கு கடும் தண்டனை இருக்கிறது. அல்லாஹ்வின் மன்னிப்பும் திருப்தியும் இருக்கின்றன. ஆனால், உலக வாழ்க்கை ஓர் ஏமாற்றுச் சாதனமே தவிர வேறெதுவுமில்லை..' (திருக்குர்ஆன் 57:20)

தொடர்ந்து வரும் வசனத்தில், அல்லாஹ்



**வாழ்க்கையின் கதை இத்துடன் முடிவதில்லை. மறுமை என்ற நிலையான ஒரு வாழ்க்கை உண்டு. இந்த உலக வாழ்க்கையைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியவர் அங்கு கடுமையான வேதனையைச் சந்திக்க நேரிடும். அதைச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்களுக்கு மன்னிப்பும் இறைதிருப்தியும் கிட்டும்.**

மனிதர்களை விழிப்பு உணர்வுடன் வாழவும், உலக வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கவும், வெற்றிகரமாக அமைத்துக் கொள்ளவும் அழைக்கின்றான்:

'உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், வானமும் பூமியும் போன்று விசாலமான சுவர்க்கத்திற்கும் நீங்கள் முந்திச் செல்லுங்கள். அது அல்லாஹ்வில் ஈமான் கொண்டவர்களுக்காக தயார் செய்யப்பட்டிருக்கிறது. இது அல்லாஹ்வின் அருளாகும்; அதனை அவன் தான் விரும்புகிறவர்களுக்கு அளிக்கின்றான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன்' (திருக்குர்ஆன் 57:21)

# மௌலானா சையத் சல்மான் நத்வி
# இறைவனிடம் மீண்டார்!

**மார்க்கக் கல்வி, ஆராய்ச்சி, அழைப்புப்பணி, சீர்திருத்தப் பணி எனப் பல்வேறு களங் களில் முத்திரை பதித்த மௌலானா சையத் சல்மான் நத்வி அவர்கள் 2026 ஜூன் 29 அன்று இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே மீளக்கூடியவர்களாய் இருக்கிறோம்)**



**மௌலானா சையத் சல்மான் நத்வி**

மௌலானா சையத் சல்மான் நத்வி அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து அதிர்ந்து போனேன். அவர் தற்காலத்தின் தலைசிறந்த மார்க்க அறிஞர்களில் ஒருவர். நாடறிந்த எழுத்தாளர். பன்னூலாசிரியர். கல்வியாளர். சிந்தனையாளர். அவருடைய மரணம் அவருடைய குடும்பத்தாருக்கும் மாணவர் களுக்கும் மட்டுமின்றி ஒட்டு மொத்த முஸ்லிம் உம்மத்துக்கும் இஸ்லாமிய உலகத்தின் கல்விக் குழாம்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

மௌலானா சையத் சல்மான் ஹுசைனி நத்வி அவர்கள் தம்முடைய ஒட்டுமொத்த வாழ்வையும் கல்வி, ஆராய்ச்சி, சத்திய மார்க்க அழைப்பு ஆகியவற்றிலும் கல்வி நிலையங் களையும் அறிவுக் களங்களையும் கட்டி அமைப்பதிலும் அவற்றைச் செழித்தோங்கச் செய்வதிலும் சித்தாந்த வழிகாட்டுதலிலும் அர்ப்பணித்தார். குர்ஆன், ஹதீஸ், நபி வரலாறு, இஸ்லாமிய ஃபிக்ஹு ஆகியவற்றின் தனிச்சிறப்பு மிக்க ஆசானாகத் திகழ்ந்தார். நம்முடைய நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர் களைப் பயிற்றுவிப்பதிலும் பண்படுத்துவதிலும் முத்திரை பதித்தார்.

அவர் விட்டுச் சென்றுள்ள அவருடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பேருரைகள் ஆகிய அனைத்தும் கல்விச் சேவைக்கான விலைமதிப்புமிக்க கருவூலமாக இருக்கின்றன. அவற்றிலிருந்து முஸ்லிம் உம்மத் நீண்ட காலம் வரை பயனீட்டிக் கொண்டே இருக்கும்.

தாருல் உலூம் நத்வத்துல் உலமா பல்கலைக்கழகத்துடனும் ஜாமிஆ சையத் அஹ்மத் ஷஹீத் பல்கலைக் கழகத்துடனுமான அவருடைய நீண்ட நெடிய தொடர்பும், ஜமிய்யத் ஷபாபுல் இஸ்லாம் நிறுவனத் தலைவராக அவர் ஆற்றிய சேவைகளும் ஏராளமான கல்வி, மருத்துவ நிறுவனங்களை நிறுவி நடத்துவதில் அவர் ஆற்றிய முதன்மையான பங்கும் மார்க்கக் கல்வியைப் பரப்புவதிலும், ஆளுமைகளை வார்த்தெடுப்பதிலும், சமூக, சமுதாயச் சேவைகளிலும் அவருடைய மும்முரமான பங்களிப்பும் பங்கேற்பும் என்றென்றும் நினைவு கூரப்படும்.

அவர் மார்க்கக் கல்வியின் ஆழமான, தொலைநோக்குப் பார்வையை தற்காலத் தேவைகளுக்கு இயைந்ததாக ஆக்கி இந்தியாவிலும் உலக அளவிலும் இஸ்லாமியச் சிந்தனைக்கும் சித்தாந்தத்துக்கும் புதிய திசைகளை வழங்கியிருந்தார்.

பெரும் பெரும் சிந்தனையாளர் கூட தவறுகளுக்கும் பிழைகளுக்கும் அப்பாற்பட்டவராக இருத்தல் முடியாது. மௌலானா சல்மான் நத்வி அவர்களின் சில சிந்தனைகள், நிலைப்பாடுகள், அறிக்கைகள் ஆகியவற்றோடு முரண்பாடுகள் இருக்கக் கூடும். இருந்தன. ஆனால் அவற்றின் காரணமாக பல்வேறு களங்களில் அவர் ஆற்றியிருக்கின்ற மகத்தான சேவைகளின் முக்கியத்துவம் குறைந்துவிடாது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கும், மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்துக்கும் மனப்பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் துக்கத்தில் நாங்களும் பங்கேற்கின்றோம். அவரைச் சார்ந்தோருக்கு அழகிய பொறுமையை வழங்குவாயாக என்று கருணைமிக்க இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

இறைவா..! மௌலானா சல்மான் நத்வி அவர்களின் பிழைகளைப் பொறுத்து அருள்வாயாக. மன்னித்தருள்வாயாக! இஸ்லாத்துக்காக அவர் வாழ்நாள் முழுவதும் ஆற்றிய சேவைகளை ஏற்றுக் கொள்வாயாக. அவர்களுக்கு உத்தமர்களின் உயர்ந்த அந்தஸ்தைத் தந்தருள்வாயாக! ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸின் உயர்ந்த மாளிகைகளை வழங்குவாயாக என்று எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

மார்க்கத்துக்காக சேவையாற்றுகின்ற இந்த இலட்சியப் பணியை மேற்கொள்கின்ற, அவரைப் போன்ற ஒழுக்க சீலமும் திறமையும் புலமையும் ஆற்றலும் வாய்ந்த ஆளுமைகளை முஸ்லிம் உம்மத்துக்கு வழங்குவாயாக! என்றும் பிரார்த்திக்கின்றோம்.

**– சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி**
அகில இந்தியத் தலைவர்,
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்


www.samarasam.net
# சமரசம்
மாதம் இருமுறை இதழ் ₹25

46 ஆண்டுகளைக் கடந்து
இதழியல் பயணத்தில்
முத்திரை பதித்த முன்னோடி இதழ்




விருப்பு வெறுப்பற்ற
நேர்கொண்ட பார்வை

தேன் தமிழில் தீன் மணக்கும்
திங்களிருமுறை இதழ்

எல்லாருக்குமான இதழ்
எல்லாம் நிறைந்த இதழ்

வங்கி விவரம் :
Creative Communication Chennai
A/c No. 30705346015
State Bank of India, Jamalia Branch,
IFS Code - SBIN0014623
Gpay : 9566153142

தொடர்புக்கு :
சமரசம்
138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை 12.
• 044-2662 0091 • 95661 53142
• samarasam12@gmail.com
• www.samarasam.net

# நீங்கள் யாரை வணங்கிக் கொண்டிருந்தீர்கள்?

**மேலும், அந்நாளில் அவன் மனிதர்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவான். பிறகு வானவர்களிடம் கேட்பான்: 'என்ன, இவர்கள் உங்களைத்தானா வணங்கிக் கொண்டிருந்தார்கள்?'[61] அப்போது அவர்கள் பதில் கூறுவார்கள்: 'தூய்மையானவன் நீ! எங்களுடைய தொடர்பு உன்னுடன்தானே தவிர இவர்களுடன் அல்ல![62] இவர்கள் வணங்கிக் கொண்டிருந்தது எங்களை அல்ல; ஜின்களைத்தான்! இவர்களில் பெரும்பாலோர் அந்த ஜின்களின் மீதே நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.'[63] (அவ்வேளை நாம் கூறுவோம்:) 'இன்று உங்களில் எவரும் வேறெவர்க்கும் இலாபம் அளிக்கவும் முடியாது; நஷ்டம் ஏற்படுத்தவும் முடியாது'. மேலும், கொடுமை புரிந்து கொண்டு இருந்தவர்களிடம் நாம் கூறுவோம்: 'இப்பொழுது சுவையுங்கள் இந்த நரகவேதனையை! இதைத்தான் நீங்கள் பொய்யென்று கூறிக் கொண்டிருந்தீர்கள்!'.**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 40-42**

**61.** தொன்மைக் காலத்திலிருந்து இன்று வரை எல்லாக் காலத்து இணைவைப்பாளர்களும் வானவர்களை தேவிகளாகவும் தெய்வங்களாகவும் அறிவித்து அவற்றின் சிலைகனை வடித்து அவற்றை வழிபட்டே வந்துள்ளார்கள். ஒருவரை மழைக் கடவுள் என்றார்கள்; இன்னொருவரை மின்னலின் தெய்வம் என்றார்கள்; வேறொருவரை காற்றின் கடவுள் என்றார்கள். செல்வத்துக்கான தெய்வமாக்கப்பட்டார் ஒருவர். கல்விக்கான கடவுளாக அறிவிக்கப்பட்டார் இன்னொருவர்.

அதே போன்று மரணத்துக்கும் அழிவுக்கும் கடவுள் ஆனார் வேறொருவர். இது தொடர்பாகத்தான் வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் இங்கு, 'மறுமை நாளில், 'என்ன நீங்கள் இந்த மக்களின் வணக்கத்திற்குரியவராக ஆகியிருந்தீரா, என்ன?' என்று வானவர்களிடம் கேட்கப்படும்' என்று குறிப்பிடுகின்றான். உண்மை நிலையை விசாரித்தறிவது மட்டுமே இந்தக் கேள்வியின் நோக்கமாக இருக்கவில்லை. அதற்கும் மேலாக, 'இவர்களின் வழிபாடு உங்களுக்கு உவப்பானதாக இருந்ததா, என்ன? 'மக்களே! நாங்கள்தாம் உங்களின் வழிபாட்டுக்குரியவர்கள் ஆவர். நீங்கள் எங்களையே வழிபட்டு வாருங்கள்' என்று இவர்களைப் பார்த்து நீங்கள் சொன்னீர்களா, என்ன? அல்லது இந்த மக்கள் உங்களை வழிபட வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்களா?' என்கிற கேள்வியும் இதில் பொதிந்திருக்கின்றது.

28 ஆம் பக்கம் பார்க்க...

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# இறுதி இருப்பிடம்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் இறக்கின்ற போது அவருக்குக் காலையிலும் மாலையிலும் அவருடைய இறுதி இடம் காண்பிக்கப்படுகின்றது. அவர் சுவனவாசிகளில் ஒருவராக இருப்பாரேயானால் சுவனமும், நரகவாசிகளில் ஒருவராக இருப்பரேயானால் நரகமும் அவருக்குக் காண்பிக்கப்படுகின்றது.'**

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) நூல் : புகாரி

ஒருவர் இறந்துவிடும் போது அவர் முற்றாக அழிந்தொழிந்து போய்விடுவதில்லை என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. மரணம் என்பது உண்மையில் ஓர் உலகத்திலிருந்து இன்னொரு உலகத்திற்குச் செல்வதாகும். இதனை ஆலமே பர்ஸக் என்று சொல்வார்கள். அங்கிருந்து எவராலும் மீண்டும் இந்த உலகத்துக்குத் திரும்பி வர முடியாது. மறுமை நாள் வரையில் அவர் ஆலமே பர்ஸக் எனப்படும் அந்த இடைப்பட்ட உலகத்திலேயே இருப்பார்.

ஆலமே பர்ஸக் எனும் அந்த இடைப்பட்ட காலத்தில் இந்த உலகத்தில் இறைவனுக்கு அடி பணிந்து வாழ்ந்த நல்லடியார்களுக்கு அவர்களின் இறுதி இருப்பிடம் (அதாவது சுவனம்) காண் பிக்கப்படும். இவ்வாறாக ஆலமே பர்ஸக் காலகட்டத்தை அவர்கள் நிம்மதியாக, மன நிறைவோடு கழிப்பதற்கு உதவியாக அவர்களுக்கு இவ்வாறு அவர்களின் இறுதி இருப்பிடம் காண்பிக்கப்படும்.

அதற்கு நேர்மாறாக இந்த உலகத்தில் இறைவனை மறந்தும், மறுத்தும் இறைவனுக்கு எதிராகக் கலகம் செய்தும் வாழ்ந்தவர்களுக்கு அந்த இடைப்பட்ட காலத்தில் அவர்களின் இறுதி இருப்பிடமான நரகம் காண்பிக்கப்படும்.

மரணம் நிகழ்ந்த கணத்திலேயே தன்னுடைய வாழ்வு அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து விடு கின்றது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இந்த உலகில் நாம் வாழ வேண்டும். இறைவனிடத்தில் மனிதர்களுக்கு இரண்டே இரண்டு நிலையான இருப்பிடங்கள்தாம் இருக் கின்றன. அதாவது அவர்களின் பங்குக்கு ஒன்று சுவனம் வரும். அல்லது அவர்கள் நரகத்தில் நுழைவிக்கப்படுவார்கள். நம் பங்குக்கு சுவனம் கிடைக்க வேண்டுமெனில் இந்த உலக வாழ்வில் சுவனவாசிகளின் பண்புநலன்களைக் கொண்டவர்களாக வாழ்வதுதான் ஒரே வழியாகும்.

# உண்மையான வாழ்வு

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஓ! இறைவனே! மறுமையின் வாழ்வுதான் வாழ்வாகும்.'**

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக்(ரலி) நூல் : முஸ்லிம்

நபிகளாரின் இந்த அமுத வாக்கில் ஆயிரம் அறிவுரைகளும் போதனைகளும் பொதிந்திருக் கின்றன. மறுமையின் வாழ்வுதான் உண்மையான, விரும்பத்தக்க வாழ்வு ஆகும் என்பதை ஒருவர் உணர்ந்து விடுவாரேயானால் அவருடைய இந்த உலக வாழ்வு அடியோடு மாறிவிடும். அவரு டைய காலைப்பொழுதுகளும் மாறி விடும். மாலைப்பொழுதுகளின் சித்திரமும் மாறிவிடும். இந்த மாதிரியான தெளிவும் உணர்வும் கொண்ட மனிதர் இந்த வாழ்வில் ஒரே ஒரு நிமிடம் கூட மறுமையை மறக்க மாட்டார்.

மறுமை வாழ்வுக்கான தயாரிப்பிலேயே அவருடைய வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் நாளும் பொழுதும் கழியும். அவர் ஒருபோதும் இந்த உலக வாழ்வின் வனப்புகளை, வளங்களை, சின்னச் சின்ன மகிழ்வுகளை தன்னுடைய வாழ்வின் இலக்காக்கிக் கொள்ள மாட்டார். பொறுப்பு உணர்வோடும் விழிப்பு உணர்வோடும் வாழ்வதில் அவர் முனைப்புடன் இருப்பார். மறுமை வாழ்வு பாழாகி விடக் கூடாது என்கிற கவலையே அவரை எந்நேரமும் விழிப்புடன் வைத்திருக்கும்.

நபிமொழி விளக்கம் ★ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ★ தமிழில் : அபூ ஹானியா

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மறுமை நாளில் வானவர்களிடம் மட்டுமின்றி உலகத்தில் மக்கள் வழிபட்டு வந்த மற்ற ஆளுமைகள் அனைவரை நோக்கியும் இது போன்ற கேள்வி கேட்கப்படும். இது தொடர்பாக திருக்குர்ஆன் 25:17-இல் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது:

'மேலும், அந்நாளிலேயே (உம் இறைவன்) இவர்களையும் ஒன்று திரட்டுவான். (இன்று) அல்லாஹ்வை விடுத்து இவர்கள் வணங்கிக் கொண்டிருக்கும் தெய்வங்களையும் கூப்பிடுவான். பிறகு, அவன் அவர்களிடம் கேட்பான்: 'என்னுடைய இந்த அடிமைகளை நீங்கள் தாம் வழிகெடுத்தீர்களா? அல்லது அவர்களே வழி கெட்டுப் போனார்களா?' (திருக்குர்ஆன் 25:17)

**62.** 'உன்னுடைய இறையாண்மையிலும், வணக்கத்திற்குரியவன் என்கிற உன்னுடைய தனித்தகுதியிலும் வேறு எவரேனும் பங்காளியாக இருப்பதை விட்டு நீ தூய்மையானவனாக, மேம்பட்டவனாக இருக்கின்றாய். இந்த மக்களுடன் எங்களுக்கு எந்தவிதமான தொடர்பும் பந்தமும் எதுவும் இல்லை. இவர்களின் எந்தவொரு செயலுக்கும் நாங்கள் பொறுப்பாளர்கள் அல்லர். நாங்களோ உன்னுடைய அடிமைகளாய் இருக்கின்றோம்' என்று அவர்கள் பதில் தருவார்கள்.

**63.** இந்த வாசகத்தில் ஜின்கள் என்பது ஷைத்தான்களைக் குறிக்கும். மேம்போக்காகப் பார்க்கின்ற போது இவர்கள் எங்களின் பெயர்களைச் சொல்லி தம்முடைய கற்பனைகளுக்கேற்ப எங்களின் வடிவங்களை வரைந்து எங்களை வழிபட்டு வந்தார்கள் என்றே தோன்றும். ஆனால் உண்மை என்னவெனில் இவர்கள் ஷைத்தான்களைத்தான் வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் ஏக இறைவனை விட்டு விட்டு மற்றவர்களை உங்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாகக் கருதுங்கள்; அவர்களுக்கு முன்னால் உங்களின் நன்கொடைகளையும் காணிக்கைகளையும் அர்ப்பணியுங்கள் என்று அவர்களுக்கு இந்தப் பாதையைச் சொல்லிக் கொடுத்தவர்கள் அந்த ஷைத்தான்கள் தாம்.

'ஜின்கள்' என்கிற சொல் மலைவாழ் மக்களையும் வேளாண்மை செய்கின்ற விவசாயப் பெருமக்களையும் பாலைவனவாசிகளையும்தாம் குறிக்கும் என்று பொருள் கற்பித்து வந்த மக்களின் எண்ணம் தவறானது என்பதை இந்த வசனம் திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக தெளிவுபடுத்துகின்றது. இந்த வசனத்தை வாசித்த பிறகு மலைவாழ் மக்களையும் விவசாயிகளையும் பாலைவன வாசிகளையும் மக்கள் வழிபட்டு வந்தார்கள் என்றும் அவர்கள் மீதே நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்றும் எந்தவொரு அறிவார்ந்த மனிதராவது கருதுவாரா, என்ன?

இந்த வசனத்திலிருந்து 'இபாதத் - வழிபாடு' தொடர்பான மற்றுமொரு பொருள் பற்றிய செய்தியும் கிடைக்கின்றது. பூஜை, வழிபாடு போன்றவற்றுக்குப் பெயர்தான் 'இபாதத் - வழிபாடு' என்பதல்ல. அதற்கும் மேலாக ஒருவரின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுவதும், எந்தவொரு தயக்கமோ தடுமாற்றமோ இன்றி ஒருவரைப் பின்பற்றி நடப்பதும் கூட 'இபாதத் - வழிபாடு' ஆகும்.

எதுவரையெனில் ஒருவர் மீது ஒருவர் சாபம் விடுக்கின்றார் (ஷைத்தான் மீது சாபம் விடுப்பதைப் போன்று); அதற்குப் பிறகும் அவர் காண்பித்த வழிமுறையின்படி மட்டுமே தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார் எனில் அந்த நிலையிலும்கூட அவர் தாம் சாபம் விடுத்தவரை வழிபட்டவராகத்தான் கருதப்படுவார். இது தொடர்பான மற்ற எடுத்துக் காட்டுகள் மகத்துவம் மிக்க குர்ஆனில் இன்னும் வேறு சில இடங்களிலும் பதிவாகியிருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு: திருக்குர்ஆன் 4:145; 5:91; 9:31; 19:27; 28:86)

(தொடரும்)

# தவெக வெற்றிக்குப் பின்னால்..!

## - அரசியல் நோக்கர்களின் கருத்துகள்

மக்களாட்சியில் தேர்தல் என்பது மகத்தான புரட்சியாகும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கும் நாள் ஜனநாயகத் திருவிழா! மக்கள் அதிகாரம் யாரையும் ஆட்சியில் அமர்த்தும். தமிழ்நாட்டில் தொடர்ந்து இரண்டாவது முறையாக திமுகவே ஆட்சி அமைக்கும் என்று எல்லா கருத்துக்கணிப்புகளும் கூறின. ஆனால் எல்லாவற்றையும் பொய்யாக்கி தமிழக வெற்றிக் கழகம் அதிக இடங்களில் வெற்றி பெற்று சாதனை படைத்தது.

நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) திராவிடக் கட்சிகளின் (திமுக, அதிமுக) 59 ஆண்டுகால ஆதிக்கத்தை முறியடித்து தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. மாற்று அரசியல் மீதான மக்களின் எதிர்பார்ப்பு, புதிய வாக்காளர்களின் ஆதரவு இந்த மாற்றத்திற்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன. பல தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சி செய்த திமுக, அதிமுக மீதான மாற்று சிந்தனை வாக்காளர்களிடையே வலுத்தது.

‘புதிய தலைமுறை இளைஞர்கள், புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புகளும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. இரு பிரதான கட்சிகள் மீதும் எழுந்த ஊழல் புகார்கள், ஆதிக்க மனப்பான்மை ஆகியவை புதிய ஆட்சிக்கு வழி வகுத்தன. கிட்டத்தட்ட அனைத்து அரசியல் நோக்கர்களுமே தவெக மக்களிடையே பரவலாக ஏற்படுத்திய தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டனர்.

வாக்காளர்களில் ஒரு பகுதியினர் கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக விஜய்க்கு ஆதரவளித்து இருப்பதை இந்த முடிவுகள் உணர்த்துகின்றன. இந்தத் தேர்தலின் மிக முக்கியமான சாராம்சம், தமிழ்நாட்டின் நீண்டகால இரு துருவ அரசியல் வரலாற்றில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, காங்கிரஸ் ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றப்பட்ட 1967ஆம் ஆண்டுக்குப் பிறகு திமுக அல்லது அதிமுகவே ஆட்சியில் இருந்துள்ளன. தற்போது தவெகவின் எழுச்சி அந்த நீட்சியை உடைத்துள்ளது’ என்கிறார் இளங்கோவன் ராஜசேகர்.

இவரது கூற்றுப்படி, 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள், பெண்களின் ஆதரவைப் பெருமளவில் விஜய் ஈர்த்துள்ளார். இவையே 35 விழுக்காடு வாக்குகளைப் பெற உதவியது. இது யாராலுமே கணிக்க முடியாத முடிவாக இருக்கிறது. இதற்கு முன்பும் மாற்றத்தை விரும்பிய முதல் தலைமுறை வாக்காளர்கள் இருந்துள்ளனர். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் முந்தைய தேர்தல்களில் சாத்தியப்படவில்லை. இதில் சமூக ஊடகங்களின் பங்கு பெருமளவில் இருக்கிறது. அதே நேரம், ஆட்சி எதிர்ப்பு மனநிலையைக் கொண்டிருந்த தரப்பினர், பொதுவாக திராவிடக் கட்சிகளின் மீது அதிருப்தி கொண்டிருந்த தரப்பினரின் வாக்குகளை தவெக தன்வசமாக்கியுள்ளது.

கட்சிகளின் வாக்கு வங்கிகளில் சேதத்தை ஏற்படுத்தி, விஜய் முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார் என அரசியல் நிபுணர்கள்

பலரும் கணித்திருந்தாலும், ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு அவருக்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை என்று பிபிசி தமிழிடம் பேசிய அரசியல் விமர்சகர் ராமு மணிவண் ணன் குறிப்பிட்டார்.

திராவிட பாரம்பரியத்திற்கு ஏற்பட்டுள்ள இந்தச் சறுக்கலுக்குப் பின்னால் இருக்கும் மற்றொரு முக்கியக் காரணி தவெகவில் இருந்த அமைப்பு ரீதியான புதுமை என்று நிபுணர்கள் கருதுகின்றனர். விஜய்க்கு இருந்த செல்வாக்குதான் இந்த எழுச்சிக்குப் பெருமளவு காரணமாக இருந்ததாக ஒரு புறம் கூறப்பட்டாலும், பல ஆண்டுகளாக ரசிகர் மன்றங்களை ஒழுங்குபடுத்தி, கட்சித் தொண்டர்களாகத் திட்டமிட்டு அவர் மாற்றியமைத்துள்ளார். அவரது பிம்பக் கட்ட மைப்புக்கு இருந்த ஈர்ப்பையும், அடிமட்ட அமைப்பைச் சீர்படுத்தியதையும் இணைக் கும் இந்த அணுகுமுறை, பல பத்தாண்டுகள் உழைப்பில் உருவாக்கப்பட்ட பாரம்பரிய மான கட்சிகளுடன் போட்டியிட அவருக்கு உதவியுள்ளது. இருப்பினும் இதை வைத்து மாநிலத்தில் திராவிடக் கொள்கைகளின் செல்வாக்கு குறைந்துவிட்டது என்று கூற முடியாது.

ஆட்சியைத் தக்க வைக்கும் இலக்குடன் மகளிர், இளம் வாக்காளர்களை ஈர்க்கும் இலக்குடன் பல்வேறு நலத்திட்டங்களை மு.க.ஸ்டாலின் அறிவித்தார். ஆனால் அவற் றின் பலன்களை அறுவடை செய்ய இய லாமல், அக்கட்சி மிகுந்த பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆளும் கட்சியாகத் தேர்தலை எதிர்கொள்ளும் சூழலில், மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக ஒரு வலு வான நிலையைத் தக்க வைத்துக் கொள்ளும் எனப் பரவலாக எதிர் பார்க்கப்பட்ட நிலையில் தோல்வி அடைந்தது. இந்தத் தேர்தலில் தமிழக அரசியல் இரு துருவப் போட்டிக்குப் பிந்தைய புதிய கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. அதே வேளையில் இது நீடிக்குமா என்பதை விஜயின் செயல்பாடு களைப் பொறுத்தே தீர்மானிக்க முடியும். திராவிடக் கட்சிகள் அப்படியொன்றும் மிகப் பெரிய இழப்பைச் சந்திக்கவில்லை எனவும் அவை மீண்டு வருவதற்கான வாய்ப்பு களும் சாத்தியக் கூறுகளும் இன்னமும் இருக் கின்றன என்றும் கூறுகிறார் மூத்த பத்திரி கையாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன்.



மகளிர், இளம் வாக்காளர்களை ஈர்ப்பதற் காக திமுக பல்வேறு திட்டங்களை அறிவித் தது என்றாலும் அது களத்தில் வாக்குகளாக மாறுவதற்குரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. எந்தவிதமான கொள்கை நிலைப் பாடும் இல்லாத இளைய தலைமுறையின ரைக் கவர்வதற்குரிய அணுகுமுறையை திமுக கைக்கொள்ளவில்லை. குறிப்பாக, அரசியல் மயமாக்கப்படாத இளைய தலைமுறையிடம் திராவிடக்கட்சிகளின் சித்தாந்தங்களும் அணுகுமுறைகளும் எடுபடவில்லை. இத் தனை ஆண்டுகால ஆட்சியில் மாணவர் களிடையே அரசியல் பங்களிப்பை இல் லாமல் செய்து படிப்பு, வேலை, தனிப்பட்ட வாழ்க்கை என்பதை மட்டுமே குறியாகக் கொண்ட தலைமுறைகளை வடிவமைத் ததன் மூலம் திராவிட கட்சிகள் இந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டன' என்கிறார் இளங் கோவன் ராஜசேகரன்.

மறுபுறம் நகர்ப்புறங்களில் நிலவிய அதிருப்தி திமுகவின் வீழ்ச்சியில் கணிசமாகப் பங்கு வகித்திருப்பதை முடிவுகள் காட்டு கின்றன. குறிப்பாக சென்னை போன்ற திமுகவின் கோட்டையாகக் கருதப்பட்ட இடங்களில்கூட பெரும்பாலான தொகுதி களில் தோல்வியைச் சந்தித் திருப்பது அக்கட்சியினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறிப்பாகக் கவனிக்க

வேண்டிய அம்சமாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் தேர்தல் மாற்றங்கள் நகர்ப்புறங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கம், இளம் வாக்காளர்களிடையே நிலவும் அரசு மீதான அதிருப்தியைக் காட்டுவதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் தமிழகத்தின் மிகவும் போட்டி நிறைந்த தற்போதைய அரசியல் சூழலில் பாரம்பரியமான கட்சி என்ற அடிப்படையில் அதீத நம்பிக்கையைக் கொண்டிருக்காமல் திமுக தனது முன்னுரிமைகள், அமைப்பு ரீதியான உத்திகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. தற்போது பெரும்பான்மை கவனம் தவெகவுடைய எழுச்சியின் மீது இருந்தாலும், அதிமுகவின் செயல்பாடுகள் இந்தத் தேர்தலின் மற்றொரு தவிர்க்க முடியாத அம்சமாக இருக்கிறது. ஜெயலலிதாவின் இறப்பிற்குப் பிறகு, கட்சித் தலைமை நெருக்கடிகள், உட்கட்சிப் பூசல்கள், தொடரும் தேர்தல் தோல்விகளால் அதிமுக தவித்து வருகிறது. இருப்பினும் 2026 தேர்தல் முடிவுகள் அதிமுக ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாகத் தொடர்வதைக் காட்டுவதாகக் கூறுகிறார் இளங்கோவன் ராஜசேகரன்.



இளங்கோவன் ராஜசேகரன்

**விஜய் என்ற ஆளுமையின் மீதான ஈர்ப்பு மிக முக்கியப் பங்காற்றி இருந்தாலும், அதையும் தாண்டி, தமிழக அரசியல் வரலாற்றில் தொடர்ந்து நீடித்திருக்கும் திராவிடக் கட்சிகள் இடையிலான இருமுனைப் போட்டியைத் தாண்டி மூன்றாவது சக்திக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென மக்கள் தீர்மானித்து இருப்பதை முடிவுகள் உணர்த்துகின்றது.**

ஒப்பீட்டளவில் 2021ஆம் ஆண்டைவிட குறைந்த தொகுதிகளையே அதிமுக கைப்பற்றியுள்ளது. என்றாலும் தனது இருப்பைக் கணிசமாகத் தக்க வைத்துள்ளது என்பதையும் அது தனது அணுகுமுறையை மறுபரிசீலனைக்கு உட்படுத்தினால் மீண்டு வருவதற்கான சாத்தியங்கள் உள்ளதையும் புரிந்துகொள்ள முடிவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால், பேராசிரியர் ராமு மணிவண்ணனின் கூற்றுப்படி, அதிமுக ஜெயலலிதா காலத்திற்குப் பிறகு தொடர்ச்சியாகப் பெரிய வெற்றியைப் பெற முடியாமல் இருப்பது அதன் எதிர்காலத்திற்கு சிக்கலை ஏற்படுத்துவதுடன் எடப்பாடி பழனிசாமியின் தலைமைத்துவத்தை இது கேள்விக்கு உள்ளாக்குகிறது.

திமுக பின்னடைவைச் சந்தித்து இருந்தாலும், அதுதான் இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறது. அதிமுகவுக்கு இது வரலாற்றில் இரண்டாவது பெரிய தோல்வி என்கிறார் மூத்த பத்திரிகையாளர் சிவபிரியன்.

அதிமுக 1996இல் நான்கு தொகுதிகளையே கைப்பற்றியது. 2006ஆம் ஆண்டில் 61 தொகுதிகளைப் பிடித்தது. 2021 தேர்தலில் 191 தொகுதிகளில் போட்டியிட்டு 66 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று ஆட்சியை இழந்தது. தற்போது 2026 தேர்தல் நிலவரப்படி, அதிமுக 47 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதன் வரலாற்றில் இது மிகப் பெரிய தோல்வியாகும். ஆனால் அதிமுகவின் அடிப்படைக் கொள்கையே திமுக எதிர்ப்புதான் என்னும் நிலையில், அதைத் தற்போது தவெக கையில் எடுத்து முக்கிய சக்தியாக உருவெடுக்கும் சூழலில், அதிமுக இந்த புதிய சூழலை எப்படிக் கையாளப் போகிறது என்பது மிகப்பெரிய சவாலாக இருக்கப் போகிறது’ என்று கூறுகிறார்.

வாக்காளர்களின் மனநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ்நாட்டின் நீண்டகால அரசியல் நிலைமையை மாற்றியமைக்கும் வகையிலான முடிவை மக்கள் எடுத்திருப்பதை இந்தத் தேர்தல் முடிவு காட்டுவதாகவும், ஏதோவொரு வகையில் ஆளுங்கட்சி மீது

தீவிரமான எதிர்ப்பு உணர்வு இருந்துள்ளதைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துவதாகவும் அத்துடன் இந்தத் தேர்தலை விரிவாகப் பகுப்பாய்ந்து, புரிந்துகொள்ள வேண்டிய தேவை இருப்பதுடன், மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை இது மறுவரையறைக்கு உட்படுத்துவதாகவும் பேராசிரியர் ராமு மணி வண்ணன் கூறுகிறார்.

'இந்தத் தேர்தலில் மக்கள் சித்தாந்த அடிப்படையிலோ பிரச்னைகளை மைய மாகக் கொண்டோ வாக்களித்ததாகக் கூற முடியாது. திராவிட ஆதிக்கத்தில் இருந்த தமிழக அரசியலில் புதுமை தேவை என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே பெரு வாரியான மக்கள் வாக்களித்து இருப்பதாகத் தோன்றுகிறது. குறிப்பாக வெளியில் பெரி தாகத் தென்படாத ஆட்சி எதிர்ப்பு மன நிலை இருந்திருப்பதை இந்த முடிவுகள் காட்டுகின்றன. இது வெறுமனே திராவிட அரசியலுக்கு எதிரான மனநிலை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில், அதிமுகவும் கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கிறது. இதன் மூலம் திமுக மீது இருந்த எதிர்ப்பு உணர்வை இந்தத் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது' என்று ராமு மணி வண்ணன் விளக்கினார்.

'இளைஞர்கள், பெண்களின் ஆதரவு தவெகவுக்குக் கணிசமாக இருப்பதும், திமுக, அதிமுகவுக்கு எதிரான வாக்குகளில் ஒரு பகுதி அவர் பக்கமாகத் திரும்பும் எனவும் அரசியல் நிபுணர்கள் பலரால் ஏற்கெனவே கணிக் கப்பட்டிருந்தது. ஆனால் இவ் வளவு பெரிய வெற்றியைத் தரும் அளவிலான ஆதரவு கிடைக்கும் என்று யாருமே எதிர்பார்க்க வில்லை' என்கிறார் பத்திரிகையாளர் திவ்யா.

**இந்தத் தேர்தலில் மக்கள் சித்தாந்த அடிப் படையிலோ பிரச்னைகளை மையமாகக் கொண்டோ வாக்களித்ததாகக் கூற முடியாது. திராவிட ஆதிக்கத்தில் இருந்த தமிழக அரசியலில் புதுமை தேவை என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே பெருவாரியான மக்கள் வாக்களித்து இருப்பதாகத் தோன்றுகிறது.**



ராமு மணிவண்ணன்

இதன் பின்னணியில் விஜய் என்ற ஆளுமையின் மீதான ஈர்ப்பு மிக முக்கியப் பங்காற்றி இருந்தாலும், அதையும் தாண்டி, தமிழக அரசியல் வரலாற்றில் தொடர்ந்து நீடித்திருக்கும் திராவிடக் கட்சிகள் இடையி லான இருமுனைப் போட்டியைத் தாண்டி ஒரு மூன்றாவது சக்திக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென மக்கள் தீர்மானித்து இருப்பதை முடிவுகள் உணர்த்துவதாகக் கூறுகிறார் இளங் கோவன் ராஜசேகரன்.

பரப்புரையில் சமூக ஊடகங்களின் தனித் துவமான பங்கைப் பேசியாக வேண்டும். திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக உருவெடுக்க இதற்கு முன்பும் விஜயகாந்த், சீமான் எனப் பலரும் முயன்றிருந்தபோதிலும் விஜய் அதை வலுவாகச் சாதித்துக் காட்டியிருப்பதாகவும் இந்தத் திடீர் மாற்றத்தை விரிவாக ஆராய்ந்து புரிந்துகொள்ள வேண்டிய தேவை இருப் பதாகவும் மூத்த பத்திரிகையாளர் ராதாகிருஷ் ணன் கூறுகிறார்.

தொடக்கத்தில் இருந்தே, இந்தத் தேர்தல் திமுக, அதிமுக, தவெக ஆகிய கட்சிகளுக்கு இடையிலான மும்முனைப் போட்டியாகவே பார்க்கப்பட் டது. தேர்தல் முடிவுகள் அதை மேலும் உறுதி செய்துள்ளதுடன், மூன்று கட்சிகளும் கணிச மான வாக்கு விழுக்காட்டைப் பெற்றுள்ளன. இத்தகைய மாறு தலில் சமூக ஊடகங்கள் மிக முக்கியமான பங்கை ஆற்றி யிருப்பதாகக் கூறுகிறார் ராமு மணிவண்ணன்.

தவெகவைப் பொறுத்த வரை, களத்தில் செயலாற்றியதை விடவும் துடிப்புடன் இளைய தலைமுறையைப் பிரதிநிதித் துவப்படுத்தும் சமூக ஊடகங் களில் தவெக முழு வீச்சில் இயங்கி வந்ததாகவும் அதில் இளைஞர்களின் ஆதரவைப்

பெருமளவில் பெற்றதாகவும் மூத்த பத்திரிகையாளர் மாலன் குறிப்பிடு கிறார்.

அவரது கருத்தை ஆமோதிக் கும் வகையில் பேசிய ராமு மணி வண்ணன், இந்தத் தேர்தலில் இளம் தலைமுறையினர், பெண் களின்வாக்கு வங்கி முடிவுகளை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. விஜய் நேரடி யான பரப்புரையில் அதிக தாக் கத்தை ஏற்படுத்தினார் என்று கூறுவதைவிட, அவரது தாக்கம் சமூக ஊடகங்களின் வாயிலாக இளைஞர்கள்,பெண்களிடையே பெரிதாக இருந்தது எனக் கூறு வதே சரியாக இருக்கும் என்று விவரித்தார்.

மறுபுறம் சமூக ஊடகங்கள் விஜயின் வெற்றிக்கு ஒரு கூடுதல் காரணியாக இருந்ததே யொழிய அதுவே மூல காரண மாக இருந்ததாகச் சொல்லிவிட முடியாது. குறிப்பாக விஜயை விமர்சிப் பதைத் தாண்டி, அவரை ஆதரிப்பவர்களையும் ‘தற்குறி’ என்று விமர்சிக்கத் தொடங்கியது, அவருக்கு இருந்த ஆதரவுத் தளத்தை மேலும் வலுப்படுத்தியது’ என்கிறார் பத்திரிகையாளர் மணி.

இந்தத் தேர்தலுக்கான பரப்புரையைப் பொறுத்தவரை, விஜய் தாமாக நேரடியாகச் சென்று பரப்புரைகளை மேற்கொள்வதில் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. மாறாக, அவர் இளம் தலைமுறையினரையே தனக்கான பரப்புரயை மேற்கொள்ளச் செய்தார். திமுக தன்னை பரப்புரை செய்ய விடாமல் தடுப்பதாகவும் தனக்காகஇளம் தலைமுறையினர் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் ஊக்குவித்தார். அதைத் தொடர்ந்து தமிழக மாணவர்களும் இளைஞர் களும் தத்தமது குடும்பங்களில் தொடங்கி சமூகத்தில் பல்வேறு மட்டங்களில் தவெகவுக்காக பரப் புரைகளை மேற்கொண்டனர் என்று கூறுகிறார் பத்திரிகையாளர் சிவப்பிரியன்.



சிவப்பிரியன்

**விஜய் தாமாக நேரடியாகச் சென்று பரப்புரைகளை மேற்கொள்வதில் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. மாறாக அவர் இளம் தலைமுறையினரையே தனக்கான பரப்புரயை மேற்கொள்ளச் செய்தார். திமுக தன்னை பரப்புரை செய்ய விடாமல் தடுப்பதாகவும் தனக்காக இளம் தலைமுறையினர் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் ஊக்குவித்தார்.**

விஜய் வீட்டுக்கு ஒருவரைத் தனக்கான பரப்புரையாளராக மாற்றியதன் மூலம் சமூக ஊட கங்களின் வாயிலாகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார் என்று கூறும் அவர், பாரம் பரியமான வாக்கு சேகரிப்பு முறைகளைத் தகர்த்து, இப்படி யொரு வித்தியாசமான அணுகு முறையை அவர் கைக் கொண்டதன் மூலம் தனித் துவமான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறு கிறார். இத்தகைய அணுகுமுறை மிகவும் புதிது என்பதுடன் இது பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டிய ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.

தவெக கூட்டணி ஆட்சி நடத்துகிறது. திமுக அணியிலிருந்து ஏறக்குறைய அனைவரும் அணி மாறி ஆதரவளித்து ஆட்சி தொடர்கிறது. தவெகவின் வளர்ச்சி, பலன் கருதி பல அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜி னாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்து வருகின்றனர். இதனால் இடைத்தேர்தல் மூலம் தவெக தனிப்பெரும்பான்மை பெற திட்டமிடுவதை அறியலாம். எப்படி இருப் பினும் மக்கள் அளித்துள்ள வாய்ப்பை தவெக பயன்படுத்தி ஊழல், இலஞ்சம் இல் லாத சட்டம் ஒழுங்கைச் சரியாக நிர்வகித்து ஃபாசிஸத்திற்கு அடிபணியாமல் ஒரு சிறப்பான ஆட்சியை வழங்கவேண்டும் என் பது மக்களின் எதிர்பார்ப்பாக இருந் தாலும் காலமே இதற்கான விடையைச் சொல்லும்.

# உயர்நீதிமன்றத் தீர்ப்பு

## இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கான அநீதி

- சேயன் இப்ராகிம்

இஸ்லாத்தைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின முஸ்லிம்களுக்குக் கல்வி வேலை வாய்ப்புகளில் வழங்கப்பட்டுள்ள 3.5 விழுக்காடு இடஒதுக்கீட்டின் கீழ் பலன் பெறத் தகுதியுடையவர்கள் என தமிழக அரசு 2024ஆம் ஆண்டு பிறப்பித்த அரசாணையை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.பி. பாலாஜி ஆகியோர் கொண்ட அமர்வு 26.06.2026 அன்று இரத்து செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்து மதத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவிய இந்த நால் வகைப் பிரிவினரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லிம் என்ற சாதிச் சான்றிதழைப் பெற்று கல்வி கற்பதற்கும், அரசு வேலை வாய்ப்புகள் பெறுவதற்கும் விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட சாதிச் சான்றிதழில் BC(M) லெப்பை (அல்லது மரைக்காயர், மேலும் நான்கு பிரிவுகள்) என்று குறிக்கப்பட்டிருக்கும்.

இந்தச் சான்றிதழை வழங்கும் அதிகாரம் பெற்ற வட்டாட்சியர்களில் சிலர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம்களுக்கு சான்றிதழ் வழங்க மறுத்தனர். அப்படியே அவர்களிடம் சான்றிதழ் பெற்று வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப் பித்தவர்களுக்குச் சில துறைகள் குறிப்பாக TNPSC என அழைக்கப்படும் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) என்ற பிரிவின் கீழ் வேலை வழங்க முடியாது என மறுத்தது.

இந்த நிலையில்தான் தமிழகத்திலுள்ள முஸ்லிம் அரசியல் இயக்கங்களும், பொதுநல அமைப்புகளும் இதுகுறித்து ஒரு தெளிவான அரசாணையை தமிழக அரசு வெளியிட வேண்டுமெனக் கோரிக்கை வைத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு மேற்குறிப்பிட்ட அரசாணையைப் பிறப்பித்தது. அந்த அரசாணையைத் தான் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தற்போது ரத்து செய்து தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

ஆனால் கடந்த 31.12.2025 அன்று இதே சென்னை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் சக்திவேல் - ரமேஷ் ஆகியோரைக் கொண்ட அமர்வு தமிழக அரசின் அரசாணை செல்லும் எனத் தீர்ப்பளித்திருந்தது. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த கொங்கு வேளாளர் சமூகத்தைச் சார்ந்த பெண்ணொருவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) என்று சாதிச் சான்றிதழ் வழங்கு மாறு சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு விண்ணப்பம் செய்திருந்தார். ஆனால்

வட்டாட்சியர் சான்றிதழ் தர மறுக்கவே அந்தப் பெண் 2017ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கில்தான் நீதிபதிகள் சக்திவேல் - ரமேஷ் அமர்வு 2024ஆம் ஆண்டு தமிழக அரசு பிறப்பித்த மேற்கண்ட அரசாணை செல்லும். எனவே இஸ்லாத்தைத் தழுவிய அந்தப் பெண்ணுக்கு பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) சாதிச் சான்றிதழ் வழங்குமாறு தீர்ப்பு அளித்தது. இதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஹரி பரந்தாமன் இதுபோன்ற ஒரு வழக்கில் பாதிக்கப்பட்ட நபருக்கு பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) சான்றிதழ் வழங்கு மாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனால் இந்த இரண்டு தீர்ப்புகளையும் நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பாலாஜி அமர்வு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

ஏற்கனவே இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு தமிழக அரசின் அரசாணை செல்லும் எனத் தீர்ப்பளித்திருந்த நிலையில், நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன் - பாலாஜி அமர்வின் தீர்ப்பு நீதிபதி பரிபாலன ஒழுங்கீனம் (Jurdical Indicipline) என கற்றறிந்த வழக்கறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கயத்தாறு என்ற ஊரைச் சேர்ந்த இந்து ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் தனக்கு BC (Muslim) லெப்பை என்று சான்றிதழ் வழங்க வேண்டுமென சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு விண்ணப்பம் அனுப்பி இருந்தார். அவரது விண்ணப்பத்தை வட்டாட்சியர் நிராகரித்ததால், அவர் 2022ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். அந்த வழக்கில்தான் நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் - பாலாஜி அமர்வு 2024ஆம் ஆண்டு தமிழக அரசு பிறப்பித்த அரசாணை செல்லாது என்று தீர்ப்பளித்து வழக்குத் தொடுத்தவரின் கோரிக்கையையும் நிராகரித்துள்ளது.

இந்த நீதிபதிகள் 1951ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பினை முன்னுதாரணமாக எடுத்துக் காட்டி இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர். 1957ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் When a Hindu Converts to Islam be becomes a Muslim and his place in the Muslim Society is not determinded convesion என்று குறிப்பிட்டிருந்தது. அதாவது ஓர் இந்து முஸ்லிமாக மதம் மாறினால் அவர் ஒரு முஸ்லிம்தான். முஸ்லிம் சமுதாயத்தில் அவரது நிலை அவர் இந்துவாக இருந்த போது எந்த சாதியில் இருந்தாரோ, அதனைக் கொண்டு தீர்மானிக்க முடியாது என்பது இதன் பொருளாகும். உச்ச நீதிமன்றத்தின் இந்தக் கூற்று சரியே!




ஒரு நாடார், ஒரு தேவர், அல்லது ஒரு தலித் முஸ்லிமாக மாறினால் அவர் இந்து சமயச் சாதியை முற்றிலும் துறந்து விடுகிறார். முஸ்லிம் நாடார், முஸ்லிம் தேவர், முஸ்லிம் தலித் என்று யாரும் அவரை அழைப்பது இல்லை. (கிறித்தவ சமயத்தில் இந்துச் சமயச் சாதிப் பிரிவுகளைத் துறப்பதில்லை). எனவே நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ள இந்தத் தீர்ப்பு இந்த வழக்கிற்கு முற்றிலும் பொருந்தாது.

மதம் மாறியவர் தான் முஸ்லிம் நாடார் அல்லது தேவர் அல்லது தலித் என்று சாதிச் சான்றிதழ் கேட்கவில்லை. தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் சமூக தொழில் பிரிவுகளில் ஒன்றான லெப்பை (அல்லது வேறு நான்கைந்து பிரிவுகள்) என்றுதான் சான்றிதழ் கேட்கிறார். லெப்பை, இராவுத்தர், மரைக்காயர் என்பது சாதிப் பிரிவுகளல்ல. அவை சமூகம் அல்லது தொழில் சார்ந்த பிரிவுகள்.

**இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு தமிழக அரசின் அரசாணை செல்லும் எனத் தீர்ப்பளித்திருந்த நிலையில், நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன் – பாலாஜி அமர்வின் தீர்ப்பு நீதிபதி பரிபாலன ஒழுங்கீனம் (Jurdical Indicipline) என கற்றறிந்த வழக்கறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.**

லெப்பை என்பதற்கு Lebbai are a Prominently Tamil Speaking Muslims Trading Community என்றே ஆங்கில அகராதியில் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1901ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சென்னை மாகாண மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் லெப்பை என்பதற்கு தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 2008ஆம் ஆண்டு வழங்கிய 3.5 விழுக்காடு இடஒதுக்கீட்டில் லெப்பை பிற்பட்ட பிரிவினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனவே தமிழ் மொழியைப் பேசுகின்ற அனைத்து முஸ்லிம்களும் லெப்பை எனச் சான்றிதழ் பெறத் தகுதியுடையவர்களே! அந்த அடிப்படையிலே முஸ்லிம்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்தச் சலுகையை மதம் மாறியவர்களுக்கும் வழங்கிய தமிழக அரசு 2024ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. மதம் மாறியவர்கள் இந்துவாக இருந்தபோது பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, பட்டியலின பழங்குடியினர் என ஏதாவது ஒரு பிரிவில் இடஒதுக்கீடு பெற்றிருப்பர். அவர்கள் முஸ்லிம்களாக மாறிய பிறகு முஸ்லிம் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர். இதில் என்ன தவறு இருக்க முடியும்? இதுதானே இயற்கை நியதி?

2008ஆம் ஆண்டு பட்டியலினப் பிரிவிலுள்ள அருந்ததியர்களுக்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்த போது, பிற இரண்டு பிரிவினர்களான பள்ளர்களும், பறையர்களும் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். அது போலவே 2021ஆம் ஆண்டு மிகவும் பிற்பட்டவர்கள் பட்டியலிலிருந்த வன்னியர்களுக்கு அன்றைய அதிமுக அரசு 10.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கிய போது அதனை பிற சாதியினர் எதிர்த்து வழக்குத் தொடர்ந்து அந்த ஒதுக்கீட்டை ரத்து செய்ய வைத்தனர்.

ஆனால் மதம்மாறி இஸ்லாத்திற்கு வந்தவர்களை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள 3.5 விழுக்காடு இடஒதுக்கீட்டில் சேர்ப்பதற்கு முஸ்லிம்கள் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக அரசை வலியுறுத்தி ஆணை பிறப்பிக்க வகை செய்தனர். எனவே யாரும் எதிர்க்காத போது எதற்காக நீதிபதிகள் இப்படி ஒரு தீர்ப்பை வழங்க வேண்டும்? நமக்குப் புரியவில்லை.

மேலும் இந்தத் தீர்ப்பினை வழங்குவதற்கு முன்னர் அரசு தரப்பின் கருத்தைக் கேட்க நீதிபதிகள் முயற்சிக்கவில்லையென சில மூத்த வழக்கறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசும் இந்த வழக்கின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படவில்லை எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இரு நீதிபதிகளின் அமர்வு வழங்கிய தீர்ப்பு என்பதால் உச்ச நீதிமன்றத்தில்தான் மேல்முறையீடு செய்ய முடியும். உச்ச நீதிமன்றத்தில் நீதி கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# சமூக நீதியைப் பின்னோக்கி இழுக்கும் தீர்ப்பு

## தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்

**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர்**
**மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ வலியுறுத்தல்**

இஸ்லாத்தைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு BCM சான்றிதழ் வழங்குவதற்காக தமிழக அரசு வெளியிட்ட அரசாணை எண் 31/2024ஐ மதுரை உயர் நீதிமன்றக் கிளை ரத்து செய்திருப்பது மிகுந்த வருத்தத்தையும் கவலையையும் அளிக்கிறது. சமூக நீதியின் அடிப்படைக் கொள்கைகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் தீர்ப்பாக இதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கருதுகிறது.

இஸ்லாம் சாதி வேறுபாடுகளை அங்கீகரிக்காத மார்க்கம். மனிதர்கள் அனைவரும் இறைவன் முன் சமமானவர்கள் என்பதே இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு. லெப்பை, ராவுத்தர், மரைக்காயர் போன்ற அடையாளங்கள் சாதியப் பிரிவுகளல்ல; அவை வரலாறு, தொழில்சார் அடையாளங்கள் மட்டுமே.

ஆனால் இந்திய சமூக அமைப்பின் யதார்த்தம் வேறுபட்டதாக உள்ளது. பட்டியலின, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாத்தைத் தழுவியவுடன் அவரது சமூக, பொருளாதாரப் பின்னடைவு நீங்கிவிடுவதில்லை. மதம் மாறிய ஒரே காரணத்திற்காக அவர்களது கல்வி, வேலைவாய்ப்புக்கான சமூகநீதிச் சலுகைகள் பறிக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இந்த சமூக யதார்த்தத்தை உணர்ந்தே தமிழக அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் வரம்பிற்குள், G.O. 31/2024ஐ வெளியிட்டது. அந்த நோக்கத்தைப் பாதிக்கும் வகையிலான இந்தத் தீர்ப்பு, மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை நடைமுறை தொடர்பாக பல்வேறு கேள்விகளும் கவலைகளும் எழுப்பப்பட்டுள்ளன. அவை உரிய சட்ட நடைமுறைகளின் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதும் அவசியமாகும்.

மதுரை உயர்நீதிமன்றக் கிளை வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உடனடியாக சென்னை உயர்நீதிமன்ற தலைமை அமர்வு அல்லது உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும். இஸ்லாத்தைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படுவதற்கான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சிறுபான்மை மக்களின் நலன், சமூகநீதிக் கொள்கைகளை உறுதியாக நிலைநிறுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு கூடுதல் அக்கறையுடன் செயல்பட வேண்டும். மார்க்கத்தில் அனைவரும் சமமானவர்களாக இருந்தாலும், சமூகத்தில் உண்மையான சமத்துவம் நிலைநாட்டப்படும் வரை சமூக நீதிக்கான போராட்டம் தொடரும் என்பதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மீண்டும் வலியுறுத்துகிறது.



# மானம் காத்த மரக்குழாய்

**– முகம்மது கபீர்**

*ஸ்டெதஸ்கோப் (Stethoscope) கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, உலகெங்கும் இருந்த மருத்துவர்கள் நோயாளிகளின் இதயத் துடிப்பையும் நுரையீரலின் சத்தத்தையும் கேட்க 'நேரடி நெஞ்சறிதல்' (Immediate auscultation) என்ற முறையையே கையாண்டனர்.*

1837 ஆம் ஆண்டின் விடியல் மதராஸ் நகரை அத்தனை எளிதாக வரவேற்கவில்லை. செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வெள்ளைச் சுண்ணப் பூச்சுச் சுவர்கள் மீது காலையிலேயே வெயில் உறைப்பாக அடிக்கத் தொடங்கியிருந்தது. காற்றில் காய்ந்த கருவாட்டு வாடையும், கூவம் ஆற்றின் உவர் நாற்றமும், குதிரைச் சாணத்தின் நெடியும் கோட்டைக்குள்ளிருந்து வரும் கற்பூரத்தின் மருத்துவ மணமும் கலந்து வீசின.

கருப்பர் நகரத்து வீதிகள் விசித்திரமான ஒலிகளால் நிறைந்திருந்தன. பருத்தி மூட்டைகளை ஏற்றிய வண்டிகளின் மாடுகள் சினந்து முனகின. தோற்பைகளில் தண்ணீரைச் சுமந்து வரும் 'பிஸ்திகள்' தெருக்களில் தண்ணீரைக் குடங்குடமாகத் தெளித்துக் கொண்டே ஓடினர்.

'ஏலே... கொஞ்சம் ஓரமா போங்கப்பா!' என்று கத்திக்கொண்டே, தன் தோளில் பல்லக்குத் தூக்கும் மரக்கட்டையை மாற்றினான் குப்புசாமி.

அவன் கிழக்கிந்திய கம்பெனியின் பெரிய துரை ஒருவருக்குப் பல்லக்குத் தூக்கும் வேலை செய்தான். அவனுக்குப் படிப்பறிவு கிடையாது; அவனது உலகமெல்லாம் பல்லக்குச் சுமக்கும் அந்த மரத்தின் அழுத்தமும், சக தூக்கிகளின் வேர்வை வாடையும் மட்டும்தான். ஆனால் அண்மைக் காலமாகக் குதிரை வண்டிகளின் வரவால் பல்லக்குகளை யாரும் தேடுவதில்லை. கையில் புழங்கும் செப்புக் காசுகள் குறைந்து கொண்டே வர திருவல்லிக்கேணி ஓலைக்குடிசையில் இருந்த அவனது வறுமை இன்னும் அதிகமானது.

வீட்டிற்குள் நுழைந்த குப்புசாமிக்கு நெஞ்சு பதறியது. பதினேழு வயதே ஆன அவனது மனைவி மீனாட்சி, மூலையில் சுருண்டு கிடந்தாள். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அவளது உடல் முற்றிலுமாக இளைத்துப் போயிருந்தது.

'மீனா... இந்தா, கொஞ்சம் கஞ்சி குடிம்மா' என்று கைகளைப் பற்றினான் குப்புசாமி. அவளது உடல் நெருப்பாய்க் கொதித்தது.

‘எனக்கு ஒன்னும் செய்யலங்க..! புள்ளைகளுக்குக் குடுங்க’ என்று மார்போடு முட்டிய இருமலை அடக்கிக்கொண்டு தட்டுத் தடுமாறிப் பேசினாள் மீனாட்சி. ஒவ்வொரு இரவும் அவளது நெஞ்சைக் கிழிக்கும் இருமலும் காய்ச்சலும் அவளை உருக்கிக் கொண்டிருந்தன. ஆனால் அவளது உடலை விட அவளது அகத்தை ஒரு பெரிய பயம் வாட்டியது.

அந்தக் காலத்து மதராஸ் பெண்களைப் போல மீனாட்சிக்குத் தன் உடலென்பது ஓர் அந்நிய ஆண் தொட்டுப் பார்க்கும் விஷயம் அல்ல. ‘ஒரு வெள்ளைக்காரத் துரை வந்து என் உடம்பைத் தொடுவதா? என் நெஞ்சில் கையை வைப்பதா?’ - இந்த எண்ணமே அவளைக் காய்ச்சலை விட அதிகமாகக் கொன்றது. மானம் போவதை விட மரணமே மேல் என்று அவள் உறுதியாக இருந்தாள்.

### ஸ்டெதஸ்கோப் உலகை மாற்றிய கதை

ஸ்டெதஸ்கோப்(Stethoscope) கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்பு, உலகெங்கும் இருந்த மருத்துவர்கள் நோயாளிகளின் இதயத் துடிப்பையும் நுரையீரலின் சத்தத்தையும் கேட்க ‘நேரடி நெஞ்சறிதல்’ (Immediate auscultation) என்ற முறையையே கையாண்டனர்.

அதாவது மருத்துவர் தன் காதை நேரடியாக நோயாளியின் மார்பின் மீது வைத்துப் படுத்துக் கேட்க வேண்டும். இந்த முறை ஆண்களுக்கு ஓரளவுக்குச் சாத்தியமாக இருந்தாலும், நாணமும் குல ஒழுக்கமும் உயிராகக் கருதப்பட்ட தமிழ் சமூகத்துப் பெண்களுக்கு ஒரு சித்ரவதையாகவே இருந்தது.

1816ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரெனே லேனக்(Ren Laennec) என்ற மருத்துவர் ஓர் இளம் பெண்ணின் நெஞ்சில் காதை வைக்கத் தயங்கி, காகிதத்தைச் சுருட்டி ஒரு குழாயாக மாற்றி அவளது இதயத் துடிப்பைக் கேட்டார்.



அதுவே உலகின் முதல் ஸ்டெதஸ்கோப் பிறப்பதற்குக் காரணமாக அமைந்தது.

‘நான் வரமாட்டேங்க… அங்க எல்லார் முன்னாடியும் துரை நெஞ்சுல காதை வச்சு கேப்பாராமே? எனக்கு பயமாயிருக்கு… என்னைக் கொன்னுட்டாவது போங்க!’ என்று குப்புசாமியின் கைகளைப் பிடித்துக்கொண்டு அழுதாள் மீனாட்சி.

‘அடிப் பெண்ணே! புள்ளைங்க ரெண்டும் பசியில அழுவுது. நீ இப்படிப் படுத்துக் கிட்டா நான் என்ன பண்ணுவேன்? ஏதோ புதுசா ஒரு குழாய் வச்சிருக்காங்களாம், உடம்பைத் தொட மாட்டாங்களாம். வாம்மா’ என்று கெஞ்சிக் கூத்தாடி, அரைகுறை மயக்கத்திலிருந்த மீனாட்சியைத் தூக்கிக்கொண்டு கோட்டை மருத்துவமனைக்கு ஓடினான் குப்புசாமி.

மருத்துவமனைக்குள் நுழைந்ததும் மீனாட்சிக்குத் தலை சுற்றியது. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் எனப் பல மொழிக் குரல்கள் காதை அடைத்தன. அங்கிருந்த மர பெஞ்சில் அமர்ந்தபோது, தன் பழைய பருத்திச் சேலையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். ‘பூமி பிளந்து என்னை உள் வாங்கக் கூடாதா?’ என்று உள்ளுக்குள் கதறினாள்.

எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு மதராஸ் வந்திருந்த ஓர் உயரமான ஆங்கிலேய மருத்துவர் அவளை நெருங்கினார். மீனாட்சி பயத்தில் தன் கணவனது கையை இறுகப் பற்றிக்கொண்டு, வரப்போகும் அந்த அவமானத்தைத் தாங்கத் தயாராகக் கண்களை மூடினாள். ஆனால் அந்த மருத்துவர் அவளைத் தொடவில்லை. அவளது சேலையை விலக்கக் கூடச் சொல்லவில்லை. தன் தோல் பையிலிருந்து ஒரு விசித்திரமான, மெல்லிய மரக் குழாயை எடுத்தார். அது சுமார் ஓர் அடி நீளமுள்ள எளிய மர



ரெனே லேனக்

***இந்த ஒரு சிறிய மரக்குழாய் பின்னாளில் மதராஸ் மாகாணத்திற்கு வந்தபோது அது வெறும் மருத்துவக் கருவியாக மட்டும் பார்க்கப் படவில்லை; தமிழ் மக்களின் பண்பாட்டையும் பெண்களின் கூச்சத்தையும் மதித்த ஓர் உன்னதமான ‘மரியாதையின் சின்னமாகக்’ கருதப்பட்டது.***

உருளை - அப்போதுதான் பிரான்சிலிருந்து மதராஸ் வந்திருந்த ரெனே லேனக்கின் கண்டு பிடிப்பு.

அங்கிருந்த மொழி பெயர்ப்பாளர், ‘அம்மா, பயப்படாதீங்க. துரை உங்களைத் தொட மாட்டார். இந்த மரக் குழாயைத்தான் வைப்பார்’ என்று நிதானமாகச் சொன்னார்.

மருத்துவர் அந்த மரக் குழாயின் ஒரு முனையை மீனாட்சியின் சேலையின் மீது, அவளது முதுகுப் பக்கத்திலும், விலா எலும் பிலும் மென்மையாக வைத்தார். அவளது முகத்திலிருந்து பல அடி தூரம் தள்ளி நின்று, தன் காதை மறுமுனையில் வைத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்தபடி ஒலியைக் கூர்ந்தார்.

அந்த விநாடி, மதராஸ் நகரத்தின் அத்தனை இரைச்சல்களும் மீனாட்சியின் காதுகளில் மறைந்து போயின. மருத்துவரின் காதுகளுக்குள் அவளது நுரையீரலில் சளியும் நீரும் கோர்த்துக் கொண்டு குமிழியிடும் அந்த ஆபத்தான சத்தம் துல்லியமாகக் கேட்டது. அது கடுமையான நிமோனியா.

அக்கருவி தன் உடலின் மீது நகர்ந்தபோது மீனாட்சி மெல்லக் கண்களைத் திறந்தாள். அவள் எதிர்பார்த்த அந்த அத்துமீறல் நடக்கவில்லை. அவளது பெண்மையின் கௌரவம் அப்படியே இருந்தது. அறிவியலின் அந்தச் சிறிய மரத் துண்டு, அவளது அந்தரங்கத்தைக் காக்கும் தடுப்பாயுதமாக நின்றது.

பக்கத்தில் நின்ற குப்புசாமி, ‘என்னங்க துரை... உடம்பைத் தொடாமலேயே ஏதோ பாக்குறாரே!’ என்று வியப்பில் வாய் பிளந்து நின்றான். ஒரு சாதாரண மரக் குச்சி, மனித உடலைத் திறக்காமலேயே உள்ளே இருக்கும் உயிரின் துடிப்பை எப்படித் தெரிந்துகொள்கிறது என்று அந்த ஏழைக்குப் புரியவில்லை.

மருத்துவர் சில மருந்துகளை எழுதிக் கொடுத்து, ‘இனி பயமில்லை, சரியாகிவிடும்’ என்று சைகையில் சொல்லிச் சிரித்தார்.

இந்த ஒரு சிறிய மரக்குழாய் பின்னாளில் மதராஸ் மாகாணத்திற்கு வந்தபோது அது வெறும் மருத்துவக் கருவியாக மட்டும் பார்க் கப்படவில்லை; தமிழ் மக்களின் பண்பாட் டையும் பெண்களின் கூச்சத்தையும் மதித்த ஓர் உன்னதமான ‘மரியாதையின் சின்ன மாகக்’ கருதப்பட்டது.

உடலைத் தொடாமலேயே, ஆடை களைக் களையாமலேயே ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்ற விந்தையை நிகழ்த்தியதன் மூலம் அதுவரை மேற்கத்திய மருத்துவத்தை வெறுப்போடும் பயத்தோடும் ஒதுக்கிய மதராசிகளின் ஒட்டு மொத்தப் பார்வையை மாற்றி, அவர்களை நவீன மருத்துவமனைகளின் பக்கம் நம் பிக்கையோடு வரவழைத்தது இந்த நிகழ்வு. திருவல்லிக்கேணி முதல் ஜார்ஜ் டவுன் வரை உள்ள மக்கள் ‘கேட்கும் குழாய்’ (Listening tube) பற்றி வியப்பாகப் பேசத் தொடங்கினர்.

சில வாரங்களில் மீனாட்சி முழுமையாகக் குணமடைந்தாள். அந்த விசித்திரமான மரக் குழாய் அவளது நோயை மட்டுமல்ல, அவளது சுயமரியாதையையும் சேர்த்தே மீட்டெடுத்தது. மீண்டும் மதராசின் நெரிசல் மிகுந்த வீதிகளில் தன் குழந்தைகளை அணைத்துக் கொண்டு அவள் நடந்து சென்றபோது, அந்த அறிவியல் கருவி மனித மாண்பைக் குலைக்காமல் தன் வாழ்வைத் தழைக்க வைத்ததை அவளது அகம் நன்றி யோடு உணர்ந்தது.

● கவிஞர் காசீம்

# கைத்தடி



கால்கள் தளர்ந்தால் கைத்தடி
கால்களில் அடிபட்டோருக்குக் கைத்தடி
பார்வையற்றோருக்குக் கண்ணாகும் கைத்தடி
காந்தியின் வியப்புக்குறி கைத்தடி
பெரியாரின் கேள்விக்குறி கைத்தடி
அவ்வையின் அடையாளம் கைத்தடி

மூசா நபியின் கைத்தடி
பாறையில் நீர் சுரக்கும் கைத்தடி
யஹ்யா சின்வாரின் கைத்தடி
எதிரிகளை மிரளச் செய்யும் கைத்தடி

விரிக்காத குடையே
வெட்கப்படுவோர் கைத்தடி
அந்தியிலும் அடைமழையின்றி
அக்குடையே கைத்தடி

காவலாளிகளின் கைகளில் கைத்தடி
பதியப்படாத பத்திரம் கைத்தடி
முதலாளிக்குப் பின்னே
குடை பிடிப்போர் கைத்தடி

அபுல்கலாம் ஆசாத்தின் கைத்தடி
ஆங்கிலேயரை விரட்டிய கைத்தடி
ஜின்னாவின் கைத்தடி
நீதியரசர் செங்கோல் கைத்தடி

குச்சிக்கம்பு, குடைக்கம்பு கைத்தடி
பூச்சிக்கால் டானாக்கம்பு கைத்தடி
பூச்சிக்கால் வந்ததா?
டானாக்கம்பு வந்ததா?
அவரவருக்குப் பெயராகும் கைத்தடி

ஆலமரத்துக்கும் கைத்தடி
ஆயுள் நிறைந்தோர்க்கும் கைத்தடி
படுத்தவர் பக்கத்திலும்,
படுக்கும் கைத்தடி

# விரல் ரேகையும்
# திருக்குர்ஆனும்

● A.S.M. ரசான்

**பிரபஞ்சத்தில் கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இனிமேலும் வரப்போகிறார்கள். ஆனால் ஒரு மனிதனின் விரல் நுனியில் இருக்கும் ரேகையைப் போல இன்னொரு மனிதனுக்கு அமையவே முடியாது என்பது வியப்பான உண்மை.**

**19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் நவீன அறிவியல் விரல் ரேகை அடையாள முறையைக் கண்டறிந்து, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தத் தொடங்கியது. ஆனால் மனிதனின் அடையாளத்தை அவனது விரல் நுனி ரேகைகளைக் கொண்டே துல்லியமாக மீளமைக்க முடியும் என்ற மாபெரும் அறிவியல் உண்மையை சுமார் 1450 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குர்ஆன் உலகிற்குப் பறை சாற்றியுள்ளது.**



மனிதர்கள் மரணித்து மண்ணோடு மண்ணாகி அவர்களின் எலும்புகள் கூட மக்கிப்போன பிறகு மீண்டும் அவர்களை எப்படி உயிர்ப்பிக்க முடியும் என்று ஏழாம் நூற்றாண்டு அரேபியர்கள் நபிகள் நாயகத்திடம் வியப்புடனும் ஏளனத்துடனும் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் விதமாக, ‘அவனுடைய எலும்புகளை நம்மால் ஒன்றுதிரட்ட முடியாது என்று மனிதன் கருதிக் கொண்டிருக்கின்றானா? ஏன் முடியாது? நாமோ அவனுடைய விரல்களின் நுனியைக்கூட மிகத் துல்லியமாக அமைப்பதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம்’ என்று திருக்குர்ஆனின் 75:3,4 வசனங்கள் பேரடியாகப் பதிலளித்தன.

இந்த வசனத்தில், மனித உடலின் பெரிய உறுப்புகளையோ அல்லது இதயத்தையோ குறிப்பிடாமல், இறைவன் குறிப்பிட்டுக் காட்டிய பகுதி விரல் நுனி ஆகும். மறுமை நாளில் மனிதனை மீண்டும் எழுப்பும்போது, அவனது அடையாளத்தை அணுவளவும் மாறாமல் அப்படியே கொண்டு வருவேன் என்று கூறுவதற்குக் குர்ஆன் பயன்படுத்திய உதாரணம் தான் இந்த விரல் நுனி.

இன்றைய உயிரியல், தடய அறிவியல் கூறும் உண்மைகளின் படி, ஒரு மனிதனின் விரல் ரேகை என்பது அவனுடைய பிரத்யேக மான அடையாள அட்டை ஆகும். ஒரே கருமுட்டையிலிருந்து தோன்றி ஒரே மாதிரியான மரபணுக்களைக் கொண்டு பிறக்கும்




ஒரே மாதிரியான இரட்டையர்களுக்குக் கூட விரல் ரேகைகள் வெவ்வேறானவையாகவே இருக்கும் என்பது விசித்திரம்.

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போது மூன்று முதல் நான்கு மாதங்களிலேயே விரல் ரேகையின் வடிவங்கள் நிரந்தரமாக உருவாகிவிடுகின்றன. ஒரு மனிதனின் வாழ்நாளில் அவனது தோல் சுருங்கலாம், வயதாகலாம், அல்லது தீக்காயம் போன்ற சிறு காயங்கள் ஏற்படலாம். ஆனால் மேல் தோல் குணமடைந்தவுடன் அடித் தோலில் உள்ள அதே பழைய ரேகை வடிவமே மீண்டும் துல்லியமாக வளருமே தவிர மாறுவதில்லை.

நபிகள் நாயகம்(ஸல்) வாழ்ந்த காலத்தில் மனிதர்களின் விரல் ரேகைகள் தனித்துவமானவை என்றோ, அதை வைத்து ஒரு மனிதனை அடையாளம் காண முடியும் என்றோ யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அக்காலத்தில் அது வெறும் சாதாரணமான, வளைந்த வரிகளைக் கொண்ட தோலாகவே பார்க்கப்பட்டது.

மண்ணோடு மக்கிப் போன மனிதனை மீண்டும் படைப்பது இறைவனுக்கு ஒரு பொருட்டே அல்ல; இன்னும் சொல்லப்போனால், உலகிலேயே மிகக் கடினமான நுணுக்கமான வடிவ அமைப்பைக் கொண்ட அவனது விரல் நுனி ரேகைகளைக் கூட ஒரு கோடு மாறாமல் அப்படியே தன்னால் மறுபடைப்பு செய்ய முடியும் என்ற இறைவனின் சவால் நவீன அறிவியலின் கண்டுபிடிப்போடு நூறு விழுக்காடு பொருந்திப் போகிறது.

இன்று மொபைல் போன் அன்லாக் செய்வதில் இருந்து, பன்னாட்டு கடவுச்சீட்டு, ஆதார் அட்டை, குற்றப் புலனாய்வுத் துறை வரை மனிதனின் விரல் ரேகையே முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகிறது. அறிவியல் தொழில்நுட்பம் ஏதுமில்லாத ஒரு காலத்தில் மனித உடலின் மிக நுட்பமான இந்த தனித்துவத்தை திருக்குர்ஆன் கோடிட்டுக் காட்டியிருப்பது, அது மனிதனால் எழுதப்பட்ட நூல் அல்ல; மனிதனைப் படைத்த அந்த மாபெரும் இரட்சகனான அல்லாஹ்வின் வார்த்தைகள்தான் என்பதற்கு மாபெரும் சான்றாகும்.

**மண்ணோடு மக்கிப் போன மனிதனை மீண்டும் படைப்பது இறைவனுக்கு ஒரு பொருட்டே அல்ல; இன்னும் சொல்லப் போனால், உலகிலேயே மிகக் கடினமான நுணுக்கமான வடிவ அமைப்பைக் கொண்ட அவனது விரல் நுனி ரேகைகளைக் கூட ஒரு கோடு மாறாமல் அப்படியே தன்னால் மறுபடைப்பு செய்ய முடியும் என்ற இறைவனின் சவால் நவீன அறிவியலின் கண்டுபிடிப்போடு நூறு விழுக்காடு பொருந்திப் போகிறது.**

● ஜரினா ஜமால்

# அக்கரைப் பச்சை

## 41

ஹாஜியார் அங்கே பதில் சொல்ல முடியாமல் முழிக்க இங்கே வீட்டுக்குள் சாலிஹா வாயை மூடிக்கொண்டு அடக்க முடியாமல் சிரித்தாள். ஹாஜியார் சபை கலைந்தது என்றார். அனைவரும் கலைந்து சென்றனர். ஹாஜியாருக்கு வீட்டுக்குள்ளிருந்து கப் அண்ட் சாசரில் டீ போனது.

'இதற்கு முடிவென்ன மச்சி.. தீர்ப் பேதும் சொன்னாரில்லையே!'

'அவுங்கூட்டுக்காரரைப் பள்ளியில் கண்டு நாசுக்கா பேசுவார். இத போல தீர்ப்பு நெறய்ய உண்டு'

'இத்தன வயசுக்குப் பிறகு இதையெல்லாம் ஒரு பிரச்னைன்னு கொண்டு வராங்க பாருங்க?'

சாலிஹாவின் கையில் எப்போதும் பண நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும். சிறு வயதில் அவள் அத்தா, 'சாலிமா பத்து காசு குடுமா. உன் கையில காசு வாங்கி போய் நா கடை திறந்தா ராத்திரி வரும்போது நிறைய பணத்துடன் வருவேன்' என்பதும், மகனுடைய மணியார்டர் பணம் வந்து கையெழுத்து போட்டு வாங்கியவுடன் மாமி சாலிஹாவின் கையில் கொடுத்து 'அலமாரியில் வச்சு பூட்டு' என்பாள்.

மாமி கண்ணுக்குப் பிறகு சல்மானும் என்ன பணம் கொடுத்தாலும், என்ன செலவு செய்தாய் என்று கேட்க மாட்டான்.

'ஏங்க! என்ன செலவு செஞ்சேன்னு கணக்குக் கேட்க மாட்டீங்களா?' என்று கேட்டால் 'நான் என்ன கட்டுக் கட்டாவா கொடுத்தேன். நீ எப்படிச் செலவு செய்வேன்னு எனக்குத் தெரியும்' என்று சொல்வான்.

அந்தப் பெண் பேசியது புதுமையாக இருந்தது. கேட்பதையெல்லாம் வாங்கித் தரும் கணவன் கிடைப்பது பெரும் பாக்கியம் தானே? அந்தக் கணவனை பல பேர் இருக்கும் சபையில் அவமானப்படுத்தி விட்டது போல் மனதில் தோன்றியது. அவர்கள் வீட்டில் வைத்தே கணவனிடம் தனக்கு கைக் காசு தரும்படி கேட்டு வாதாடலாமே.. என்ன ஜென்மங்கள்?

தெருவில் பெருத்த கொட்டுச் சத்தம் கேட்டது. பஞ்சா வருது. இன்று 7ஆம் பீர். பத்து அன்னைக்கிக் கூடு சந்திக்கும்.

'ஆறாம் தெருவுக்குப் போவோமா மச்சி.. வேடிக்கை பாத்துட்டு வரலாம்'

'நான் வரலை. எனக்கும் உங்க அண்ணனுக்கும் இது பிடிக்காது. இது இணை வைப்பு என்று தெரியாதா? பல ஆண்டுகளாக நிறுத்தி வைத்திருந்த இந்தப் படுவளம் ஏன் மீண்டும் கொண்டு வந்துள்ளார்கள்.?'

'வழக்குப் போட்டுல்ல கொண்டு வந்திருக்கானுவ, நஜாத்துக்காரங்க சண்டைக்கு வரக்கூடாதுன்னு போலீஸ்லாம் போய்ச் சொல்லி கூடு எடுத்துட்டானுவ!'

சிராஜ் இருந்தான். பஞ்சா, கூடு, இதெல்லாம் ஹராம். இணைவைப்புன்னு நோட்டீஸ் போட்டு, ஊரெல்லாம் சொல்லி நிப்பாட்டியிருந்தான். அவ(ன்) சென்னைக்குப் போயிட்டா(ன்) இவங்க கேஸ் போட்டு ஜெயிச்சிட்டாங்க.

'ஒருமுறை பஞ்சா வரும்போது சிராஜ் பஞ்சாக் குதிரைக்கு ஏதோ ஊசி போட்டு விட்டான். பஞ்சால உட்கார்ந்திருந்த ஆள கீழ தள்ளி குதிரை துள்ளிக் குதிச்சி பெருங் கலவரமாயிட்டு'

பேசிக்கொண்டிருக்கும்போது ஜலிலா கண்ணா வந்தாள்.

‘சாலியாமா வந்து நாளாயிட்டோ? எனக்கு தெரியலயேமா!’

‘சொகமா இருக்கீங்களா கண்ணா!’ தூரத்து உறவென்றாலும் பிரியமானவர்கள்.

‘நீ நல்லாருக்கியாமா? நா பாத்துமா வூட்டுக்குப் போனேன். அவ மாமி சொன்னா, மதுரையிலிருந்து அவ காக்கா பொஞ்சாதி மச்சி வந்திருக்கான்னு.. அக் கரையில் வாப்பூட்டுக்கு போயிக்கான்னா! சாலியாவப் பாத்து எம்புட்டு காலமாச்சி. ஒரு எட்டு பாத்து வரலாம்னு வந்தே(ன்).’

‘நல்லவேளை கண்ணா! நானும் ஊர் புறப்படுவது போல்தான் இருக்கிறேன்’

‘நல்லா ஒரு மாசம் ஆகல.! இப்போ அவசரமா போகணுமா சாலி மச்சி?’

‘அம்மா அங்க அழுதுட்டே இருக் காங்களாம். தம்பி பொண்டாட்டி ராத்திரி போன் போட்டா. இப்போ காக்கா வந்துட் டாங்க.. வயல் தோப்பு எல்லாம் பத்திரம் ரெடி பண்ணுங்க நான் வந்து கையெ ழுத்து போடுறேன். நாளைக்கு முத்து வந்தா கொஞ்சம் பனங்கருப்பட்டி, சில்லுக் கருப்பட்டி எல்லாம் வாங்கிட்டுப் போக ணும்’

‘யாரோடம்மா போறே..?’

‘தம்பி வந்து கூப்பிட்டு போவான் கண்ணா!’

‘படுவளம் கழிச்சி போயேம்மா’

‘அப்படின்னா என்ன கண்ணா? ’

‘அசனாரை அநியாயமா கொலை பண் ணாங்களே.. அவங்களுக்காக மொஹர்ரம் பத்து நாளும் கந்தூரியும், பூக்குழி(தீக்குழி) தோண்டி நேச்சைகளை நெறவேத்து வாங்க, பத்தாம் நாள் கூடெடுத்து, கத்தம் பாத்தியா ஓதி சாப்பாடு வெளம்புவாங்க.’

ஒவ்வொரு ஊரிலும் முஹர்ரம் மாதத்தை ஒவ்வொரு விதமாகக் கொண் டாடுகிறார்கள். இவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது. வேதத்தை நன்றாகப் படித்து, நபி வழியை நன்கறிந்தவர்கள். இது மிகப்பெரும் பாவம் என்று போராடி நிறுத்தி வைக்க பல ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் அதை ஆரம்பித்து விட்டார்கள் என்றால் என்ன சொல்ல?

‘கேளிக்கைகளையும், கூத்துகளையும் நபிமார்கள், நல்லடியார்கள் பெயர்களைக் கூறி நடத்தி என்ன லாபம் காணப் போகிறார்கள். இவர்கள் வரலாற்றை அறியவில்லையா? இவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படவில்லையா?’

சாலிஹாவின் மௌனத்தைப் பார்த்து கண்ணுமா கேட்டாள்.

‘ஏ(ன்) தங்கம் அது தப்பா?’

‘கண்ணா! இதெல்லாம் சைத்தானியச் செயல்கள். இதை விட மேலான விஷ யங்கள் எல்லாம் உலகில் இருந்தது. அதையெல்லாம் ஒழித்துக்கட்டத்தான் நபி மார்கள் நமக்கு வழிகாட்டினார்கள். அதை ஒழிக்கவும் செய்தார்கள்.

‘குழிதோண்டி குதிரையில் வலம் வர வேண்டுமா? அந்தக் குழியில் மனிதர் களுக்குப் பயனளிக்கும் (உணவு, பணம், தங்கம்) பொருள்களையெல்லாம் போட வேண்டுமா?’

‘அப்படி வல(ம் )வந்தா நோயெல்லாம் போகுதாம்!’ அய்யோ என்றிருந்து சாலி ஹாவிற்கு.

‘இந்த மக்கள் ஏன் இப்படி இருக்காங்க?’

‘கண்ணா, இந்த படுவளத்தை நிறுத்தி வச்சிருந்தாங்களே? அப்போ ஏதும் கஷ்டம் வந்ததா?’

‘எப்போவும் போலதாம்மா இருந் தாங்க!’

‘இவனுங்க வீட்டுமைக்கு செய்யு றாங்க..! ரெண்டாம் தெருக்காரனுங்க கூடு தூக்குறாங்க நாங்க ஆறாம் தெருக்காரங்க தூக்குவோம்னு கேஸ போட்டு போன வருசம் திடீர்னு செஞ்சிட்டாங்களே!’

‘அருவாள எடுத்து வெட்ட வந்தாங் கன்னு எதிர்ப்பு தெரிவிச்சவுங்கள எல்லாம்

போலீசு புடிச்சிப்போச்சி. இதனால எத்தன பேரு வெளிநாட்டுப் பயணம் போவ முடியாம போச்சி தெரியுமா?'

கண்ணா பேசிக்கொண்டே போனாள்.

'கேட்டியாளம்மா! பத்து நாளைக்கு மீன்கறி திங்கிறதில்ல. மீஞ்சட்டியெல்லாம் கவுத்துப் போட்டுறுவாளுவ. பத்தாம் நாள் ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்தான். மொதல்ல சினிமா போடுவானுவ. கொமரிப்புள்ளங்களும் ஒழிச்சி மறச்சு போவாளுங்க. இப்போ

முத்து கொண்டு வந்து கொடுத்த கனத்த பணக்கட்டுகளும், மச்சி கொடுத்த பணச்செக்கையும் பெறும் பொழுது அவள் கண்களில் மதரஸாவுக்கான வழி பிறந்ததாக அக மகிழ்ந்தாள். மச்சியும், அவள் பிள்ளைகளும் கட்டிப்பிடித்து அழுது அனுப்பி வைத்தார்கள்.

பப்ளிக்கா போறாளுவ. ஒன்ன மாதிரி நாலு பேருங்கதான் இதுக்கு வருத்தப்படுறாங்க. தேடி வந்து தர்மம் கொடுக்காங்க. மத்தபடி வீணா செலவு செய்றாங்க'

'மதரசாக்க நெறய இருக்கே கண்ணா'

'இருந்து என்ன செய்ய? ஆறாந்தெரு பூரா பொம்பள கூட்டந்தா(ன்)'

நபிகளார் சொன்னார்களே! நரகத்தில் பெண்களை அதிகம் கண்டேன்னு. இனி நாள்களை வீணாக்கக்கூடாது. மதுரை போனவுடன் ஆமினாக்கா மகன்களிடம் சொல்லி வாடகைக்காவது இடம் பிடித்து ஒரு மதரஸா ஆரம்பிக்க வேண்டும். யார் வீட்டிலும் இருக்க வேண்டாம். அங்கே தங்கிக்கொண்டு சில பிள்ளைகளுடன் ஆரம்பித்தால் போதும்.

அவள் கனவுக் கோட்டையைக் கட்டிக் கொண்டிருந்தாள். அடுத்து இரண்டொரு நாளில் சாலிஹாவை அழைத்துப் போக வந்த தம்பியுடன் மதுரைக்குப் புறப் பட்டாள்.

முத்து கொண்டு வந்து கொடுத்த கனத்த பணக்கட்டுகளும், மச்சி கொடுத்த பணச்செக்கையும் பெறும் பொழுது அவள் கண்களில் மதரஸாவுக்கான வழி பிறந்த தாக அக மகிழ்ந்தாள். மச்சியும், அவள் பிள்ளைகளும் கட்டிப்பிடித்து அழுது அனுப்பி வைத்தார்கள். ஃபாத்திமா வாய் விட்டுச் சொல்லிவிட்டாள். எனக்கும் ஆம்புளப்புள்ள இல்லை. அண்ணனுக்கும் எந்தப் புள்ளயும் இல்ல. நம்ம வீடு சந்ததி இல்லாமல் ஆயிட்டே மச்சி..!'

எப்போதும் என் தொண்டைக்
குழிக்குள் இறுகிக் கிடக்கும்
துயரம் ஒன்று

வார்த்தைகளில் கூட கொட்டித்
தீர்க்க முடியாத வலியாய்
உயிர் ரணத்தின்
அதி உயர வலி அது

என்றோ இன்பங்களை மட்டும்
தந்து சென்ற நிஜம்
இன்று நினைவுகளாக மாறி
என்னை வதை செய்து கொண்டே
என் உயிர் குடிக்கிறது

சில நேரங்களில் சில வலிகளை
யாரிடமும் பகிர்ந்து கொள்ள
மனம் விரும்பாத போது
வார்த்தைகள் கழுத்து வரை வந்து
அதனுள்ளே மரணித்துப் போகிறது.

பதில் சொல்ல முடியாத வேதனை இது

மன பாரத்துடன் புறப்பட்டாள். தான் கட்டிய கோட்டைக்கும், தன் நினைவுகளுக்கும் யாரும் துணை வரப்போவதில்லை என்று புரிந்தாளில்லை.

- தொடரும்

# சமரசம் புதிர் போட்டி 14

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஜூலை 31ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மனிதர்களே! மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றி உங்களுக்கு ஏதேனும் ஐயம் இருந்தால் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; நாம் உங்களை மண்ணிலிருந்து பிறகு இந்திரியத்திலிருந்து பிறகு இரத்தக்கட்டியிலிருந்து பிறகு வடிவமைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்படாத சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம். உண்மை நிலையை உங்களுக்கு நாம் விளக்குவதற்காகத்தான் (இவற்றை நாம் எடுத்துரைக்கின்றோம்). நாம் நாடுகின்ற (இந்திரியத்)தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருவறைகளில் தங்க வைக்கின்றோம். பிறகு, உங்களைக் குழந்தை வடிவில் வெளிக்கொணர்கின்றோம்; (பிறகு உங்களை வளர்க்கின்றோம்;) நீங்கள் வாலிபத்தை அடைவதற்காக! மேலும், உங்களில் சிலர் முன்னரே திரும்ப அழைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். வேறு சிலர் மிக மோசமான வயோதிகத்தின் பக்கம் திருப்பப்படுகின்றார்கள்; யாவற்றையும் அறிந்த பிறகு எதையும் அறியாத நிலையை அடைவதற்காக! இன்னும் நீங்கள் பார்க்கின்றீர்கள்: பூமி வறண்டு கிடக்கின்றது; அதில் நாம் மழையைப் பொழியச் செய்ததும் உடனே அது சிலிர்த்து, செழித்து வளர்ந்து விதவிதமான அழகிய தாவரங்களை முளைப்பிக்கச் செய்கிறது’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்
   அ) அல் நூர் ஆ) அல் ஹஜ்
2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘மனிதன் இறந்து விட்டால் அவனுடைய செயல்கள் அனைத்தும் முடிந்து விடுகின்றன. மூன்றைத் தவிர 1. தொடர்ச்சியான தர்மம் 2. பயன் தரும் அறிவு. மூன்றாவது.....?
   அ) அவனுடைய செல்வம்
   ஆ) அவனுக்காகப் பிரார்த்திக்கும் பிள்ளை
3. இக்ரஃ என்பதன் பொருள்
   அ) ஓதுவீராக! ஆ) எழுதுகோல்
4. திருக்குர்ஆனில் ஈமானுடன் சேர்த்து ஸாலிஹான அமல் குறித்து எத்தனை முறை சொல்லப்பட்டுள்ளது?
   அ) 14 அத்தியாயங்களில் 9 முறை
   ஆ) 33 அத்தியாயங்களில் 52 முறை
5. கடந்த 8 ஆண்டுகளாக அநியாயமாகச் சிறையில் வாடும் நேர்மையான முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி
   அ) டி.ஜி.வஞ்சரா ஆ) சஞ்சீவ் பட்
6. நேரு பிரதமராக பதவி வகித்த நாள்கள்
   அ) 4399 ஆ) 6310
7. அமோனியா வாயுக்கசிவால் 18 பேர் உயிரிழந்ததனால் சீல் வைக்கப்பட்ட தொழிற்சாலை
   அ) செயிண்ட் பீட்டர் அண்ட் பால் நிறுவனம்
   ஆ) கோரமண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம்
8. நியூசிலாந்துக்கு எதிரான கால்பந்து போட்டியில் அமெரிக்க மண்ணில் முதல் கோலைப் போட்ட ஈரானிய வீரர்
   அ) ராமின் ரேசியன் ஆ) மெஹ்தி தரீமி

## புதிர் போட்டி பன்னிரெண்டுக்கான விடைகள்

1.(அ) அல் கஹ்ஃப் 2.(அ) அபூ மூஸா அஷ்அரி (ரலி) 3.(அ) ஆடை 4. (அ) முளைகளாக 5. (ஆ) ஜே.எம்.சாலி 6.(அ) அர்ராஸீ ரேஜஸ் 7.(ஆ) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் 8. (ஆ) ஏ.எம். ஷாஜகான்

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. ஷே. மஹருக், காரைக்கால் 2. M. குர்சித் பர்சானா, திட்டச்சேரி 3. K. ஜாஃபர் சாதிக், காரைக்கால் 4. ஜா. ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 5. R. கார்த்தி, ஆக்கூர் 6. G. கிருஷ்ணன், ஆற்காடு 7. பாலா ஆமினத், சிக்கல் 8. H. ஷாகுல், கொரக்கவாடி 9. P.A. சமீஹா, கடையநல்லூர் 10. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 11. ந.அனிபா, நாமக்கல் 12. G. அன்பழகன், ஆற்காடு 13. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 14. V.S. சம்சுத்தீன் ஃபைஜி, கடையநல்லூர் 15. முஹம்மது உவைஸ், ஏர்வாடி 16. H.ஆயிஷா, குன்னூர் 17. P.P. யூசுஃப் ஹஸன், கடையநல்லூர் 18. முஹம்மது சுலைமான் இல்யாஸ், திருவாரூர் 19.ஃபிர்தௌஸ், திருநெல்வேலி 20. முஹம்மது பெரோஸ் கான், நெல்லிக்குப்பம் 21. S. அஹமது நெய்னா, நாகூர் 22. அல்மாஸ் தஸ்தகீர் சல்மான், தர்மபுரி

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

**முஹம்மது பெரோஸ் கான், நெல்லிக்குப்பம்**

• அபூ மஹதி



# திருக்குர்ஆன் எனும் நான்

மனித ஜின்
இனத்தாருக்கான
ஏக இறைவனின்
வார்த்தைகள் நான்

உலகங்களின் தொடக்கம்
உயிர்களின் படைப்பு
வாழ்வின் நிகழ்வு
மரண இயல்புகளைப் பேசும்
இஸ்லாம்
எனது உள்ளடக்கம்

மரணத்திற்குப் பிறகு
எழுப்புதலும் பாவ புண்ணிய
விசாரணைக்குப் பின்
சொர்க்க நரகமும் ஒரு
மரணமற்ற பெருவாழ்வும்
எனது வாக்குறுதிகள்

படைத்த இறைவனுக்குப்
படைப்பினங்கள் கட்டுப்பட்டதும்
சாத்தான்கள் மறுதலித்ததும்
மனித ஜின் இனத்தாருக்கான
எனது எச்சரிக்கைச் செய்தி

முந்தைய வேதங்களை
மெய்ப்பித்தலும்
தூதர்களின் வாழ்வின்
படிப்பினைகளைச் சொல்வதும்
எனது பணிகளில் ஒன்று

யுத்தங்கள் காணா யுகத்
தினையும்
அசுத்தங்கள் சேரா அகத்
தினையும்

உருவாக்குவதே எமது
லட்சியங்களில் ஒன்று

ஆண்டாண்டு காலமாய்
அடிமைப்பட்டு
அறியாமையெனும்
விலங்கிடப்பட்ட சமூகங்களை
விடுவிக்க வந்த
போர்வீரன் நான்
'லவ்ஹுல் மஹ்ஃபூல்' எனும்
தூய்மையான உறையிலிருந்து
அசத்தியத்தின் வேரறுக்க வந்த
மறைவாளும் நானே

எனது உதயமும்
புனித மிக்க ரமளானின்
மற்றுமோர் சிறப்பு
நான் வந்த நோக்கத்தைச்
சுருங்கச் சொல்வதென்றால்

உயிர்களிடத்தில் அன்பு
செலுத்தவும்
மனிதர்களிடத்தில் நீதி
செலுத்தவும்
வந்துதித்த வான் மறைதான்
திருக்குர்ஆன் எனும் நான்

ஆதாமும், நோவாவும்
வாழ்ந்த வாழ்வையும்
பிர்அவ்னும், காரூனும்
அழிந்த கதையும்
என்னிலுண்டு - ஆனாலும்
நான் ஒரு வரலாற்றுப்
புத்தகமல்ல!

உடலின், உள்ளத்தின்
நோய்களுக்கும் பிடித்தாட்டும்
அறியாமை ஆணவத்தின்
பேய்களுக்கும்
மருந்துண்டு என்னில்
ஆனாலும்
நான் ஒரு மருத்துவ நூலல்ல!

கடல்களும், கருவறைகளும்
பிரசவிப்பதை நான்
அறிவிப்பேன்
வானுக்கும், மண்ணுக்கும்
தூண்களிருப்பதாய்
நானுரைப்பேன் உங்கள்
அறிவும் சிந்தனையும்

பிரமிக்கத்தக்க
புதையல்கள்
என்னில் உண்டு ஆனாலும்
நான் அறிவியல் விஞ்ஞான
ஆய்வறிக்கையல்ல

நான் ஓர் இறைவேதம்
மனித வாழ்க்கையைச்
சீர்படுத்தி செம்மையாக்க வந்த
இறையறிவுரை

மனிதர்கள் மார்தட்டிக்
கொள்ளும்
சிந்தாந்தங்களும்
முழக்கமிடும்
கொள்கைப் பரப்புரைகளும்
யுக யுகமாய்த் தீர்க்க முடியாத
சமூகச் சிக்கல்களை
அரை நொடியில் தீர்த்து
விடுவதே
எந்தன் தனிச் சிறப்பு

இருப்பினும்
என்னை எடுத்துப் படிப்போர்
வெகு சிலரே
ஏறெடுத்தும் பார்க்காதோர்
ஏராளமானோர்

தூசி படிந்த எனது
அட்டைப் பக்கத்தை
முதுகைத் தட்டுவது போல்
தட்டிவிட்டு
அடுத்த ரமளான் வரை
அலமாரியின் மேல் தட்டில்
அக்கரையாய் வைக்கின்றனர்
பல வைதீக வணக்கசாலிகள்

ஒரு போர்வாளை
பூட்டி வைத்தல் நியாயமா?
விசாரணை நாளில்
நன்மை தீமை
எடை நிறுக்கும்
மீஸானின் முன் உங்களை
நரகவாதி எனச் சுட்டினால்

கருணையே உருவான
இறைவனிடம் உங்களுக்காய்
வாதாடுவேன்
வாழ்நாளில் எனை நீங்கள்
தவறாது படித்து வந்தால்..!

## வழி காட்டுங்களேன் குட்டீஸ்..!




## சித்திரம் பேசுது..!



M. ஃபாய்னா அஸ்லி, 4ஆம் வகுப்பு,
புனித ஜோஸப் ஆங்கிலோ இண்டியன்
பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சி



Y. மாஹிரா, 4ஆம் வகுப்பு,
சாந்திநிகேதன் இந்தியன் பள்ளி
தோஹா, கத்தார்

***அன்புச் செல்லங்களே..!*** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
**IFT** *லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012*




# அஹமதின் அபார சாதனை

கர்நாடகாவின் சிக்மங்களூரு மாவட்டத்தில் உள்ள ஆல்டூர் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் அவாய்ஸ் அஹமது. 28 வயதான அஹமது பிக்சல் என்னும் ஸ்பேஸ் டெக்னாலஜி நிறுவனத்தைத் தொடங்கி நாசா ஒப்பந்தத்தை பெற்று 960 கோடி முதலீட்டை ஈட்டி சாதித்துள்ளார்.

இணைய வசதி இல்லாத நிலையில் தந்தை நதீம் அஹமது நூலகங்கள், புத்தகக் கடைகளில் இருந்து வாங்கித் தரும் புத்தகங்கள் மூலமாகவே விண்ணியல் குறித்த தனது ஆர்வத் தையும் அறிவையும் சிறு வயதிலிருந்தே அஹமது வளர்த்துக் கொண்டுள்ளார்.

தனது பள்ளிக் கல்வியை ஆல்டூர், சங்கமேஷ்வர் பேட்டை, மங்களூருவில் பயின்ற அஹமது, உயர்கல்விக்காக BITS பிலானியில் சேர்ந்தார். அங்கு அவர் கணிதம், உற்பத்திப் பொறியியல் பயின்றார். கல்லூரிக் காலத்தில் மாணவர்களுக் கான செயற்கைக்கோள் திட்டம் ஒன்றின் மூலம் இஸ்ரோ விஞ்ஞானிகளுடன் இணைந்து பணியாற்றினார். அந்த அனுபவம் செயற்கைக் கோள் மேம்பாட்டில் அவரது ஆர்வத்தை மேலும் வலுப்படுத்தியது.

2017ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற SpaceX ஹைப்பர்லூப் போட்டியில் இந்தியா சார்பாக அஹமது பங்கேற்றார். அப்போது எலான் மஸ்க்கைச் சந்தித்து SpaceX நிறுவனத்தைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றார். இது அவரது வாழ்க்கையில் முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. அந்த அனுபவமே தனது தொழில் வாழ்க்கையை விண்வெளித் தொழில் நுட்பத்திற்கே அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது என்கிறார் அஹமது.

2019ஆம் ஆண்டில் தனது பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன்பே, அவர் பிக்சல் ஸ்பேஸ் டெக்னாலஜிஸ் நிறுவனத்தை நிறுவினார். அந்நிறுவனம் 2025 ஆம் ஆண்டில் ஆறு செயற்கைக்கோள்கள் உட்பட ஒன்பது ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது. மேலும் ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் புவி கண்காணிப்புத் தரவுகளுக்காக நாசாவின் ஒப்பந்தத்தைப் பெற்ற முதல் இந்திய தனியார் விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனமாகவும் இது திகழ்கிறது.

பிக்ஸல் நிறுவனம் முதலீட்டாளர்களிடமிருந்து ரூ.960 கோடியைத் திரட்டி யுள்ளதாகவும் தற்போது இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா முழுவதும் 275 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தன் மகனின் கல்விக்காகக் கடன் வாங்குவது, நகையை அடமானம் வைப்பது உள்ளிட்ட தனிப்பட்ட தியாகங்களைச் செய்ததை நினைவு கூர்ந்து அதற்கு இப்போது பலன் கிடைத்துள்ளதாக அஹமதின் தந்தை நதீம் நெகிழ்வுடன் குறிப்பிட்டார்.

வாழ்த்துகள் அஹமது!

– ரியாஸ்

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 JULY 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

ஒருவர் செல்வ வளம் தமக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது தம் வாழ்நாள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால் அவர் தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழட்டும்

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**